இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பத்தாவது பாராளுமன்றத்தின்

முதலாவது கூட்டத்தொடர்

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் 491**

# அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின்

# எட்டாவது அறிக்கை

**(இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பாக 2025.05.09, 2025.06.05 மற்றும் 2025.11.27 ஆகிய திகதிகளில் நடத்தப்பட்ட விசாரணைகள்)**

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கபீர் ஹஷீம் அவர்களால்
2026 மாச்சு மாதம் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

*2026 மாச்சு மாதம் 06 ஆம் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தினால் அச்சிடப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டது.*

**பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கைகள் தொடர்பிலான அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைச் சமர்ப்பித்தல்.**

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(4) இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

***"அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது அச் சிபாரிசுகளை நடைமுறைப்படுத்த முடியாது என்பது அமைச்சரின் கருத்தானால் அவர் அதற்கான காரணங்களையும் அரசாங்க நிதியை முறையாகக் கையாளுவதற்கு பின்பற்றப்படும் மாற்று நடவடிக்கைமுறைகளையும் எழுத்துமூலம் விளக்கமளித்தல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை குழுவிற்கு தனிப்பட்ட ரீதியில் அழைக்க முடியும் என்பதுடன் அவ்வாறான விடயங்களால் எழும் கேள்விகளுக்கு எட்டு வாரங்களுக்குள் பதிலளிக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் அவ்வாறு தீர்மானித்தால் சட்டமா அதிபரின் அவதானிப்புக்கள் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அறிக்கை அவருக்கு சமர்ப்பிக்கப்படலாம்."***

**<u>பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்</u>**

**<u>அரசாங்க கணக்குகள் பற்றிய குழு அலுவலகம்</u>**

1. கௌரவ கபீர் ஹஷீம், பாஉ..202) 503.2.5ஆம் திகதி தொடக்கம்(தவிசாளர்) (
2. கௌரவ எண்டன் ஜயகொடி, பா.உ.
3. கௌரவ மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வுபெற்ற), பா.உ.
4. கௌரவ சுகத் திலகரத்ன, பா.உ.
5. கௌரவ சுந்தரலிங்கம் பிரதீப், பா.உ. .202) 503.2.ஆம் திகதி தொடக்கம்(
6. கௌரவ நலின் ஹேவகே, பா.உ.
7. கௌரவ அரவிந்த செனரத், பா.உ.
8. கௌரவ தினிந்து சமன் ஹென்னாயக்க, பா.உ.
9. கௌரவ ஹிஸ்புல்லாஹ் .எம்.ஏ.எல்.எம் (கலாநிதி), பா.உ. 202) 503.2.ஆம் திகதி தொடக்கம்(
10. கௌரவ ரோஹித அபேகுணவர்தன, பா.உ.
11. கௌரவ ஜேஅலவத்துவல .சீ., பா.உ.
12. கௌரவ சாமர சம்பத் தசனாயக, பா.உ.
13. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி, பா.உ.
14. கௌரவ கவிந்த ஹேஷான் ஜயவர்தன (டாக்டர்), பா.உ.
15. கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன், பா.உ.
16. கௌரவ சட்டத்தரணி சாகரிகா அதாவுத (திருமதி), பா.உ.
17. கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி, பா.உ.
18. கௌரவ கேஇளங்குமரன்., பா.உ.
19. கௌரவ ஒஷானி உமங்கா (திருமதி), பா.உ.
20. கௌரவ அஜந்த கம்மெத்தெகே, பா.உ.
21. கௌரவ ருவன்திலக்க ஜயகொடி, பா.உ.
22. கௌரவ சட்டத்தரணி துஷாரி ஜயசிங்ஹ (திருமதி), பா.உ.
23. கௌரவ ரீஜயசுந்தர .கே., பா.உ.
24. கௌரவ எம்தாஹிர் .எம் .ஏ ., பா.உ.
25. கௌரவ சுசந்த குமார நவரத்ன, பா.உ.
26. கௌரவ லால் பிரேமநாத், பா.உ.
27. கௌரவ சானக மாதுகொட, பா.உ.
28. கௌரவ சுனில் ரத்னசிரி, பா.உ.
29. கௌரவ சந்தன சூரியஆரச்சி, பா.உ.
30. கௌரவ ஜனக சேனாரத்ன (டாக்டர்), பா.உ.

## குழுச் செயலகத்தின் தற்போதைய பணியாட்தொகுதி

- திருசனத் விஜேகுணவர்தண . - உதவிப் பணிப்பாளர் (நிருவாகம்) குழுவின் செயலாளர்
- திருமதி சமிலா ரூபசிங்க - பிரதான உத்தியோகத்தர்
- திருமதி ஆர் – கியோவனி .என்.டீ.ஏ. பிரதிப் பிரதான உத்தியோகத்தர்
- திரு ஜேபீ சமீர.எல்.ரீ. - உதவிப் பிரதான உத்தியோகத்தர்
- செல்வி ஜீ.டிஅயேஷ்மந்தி .எச்.ஜே. - பாராளுமன்ற அலுவலர்
- திருமதி ஜீ கல்லேகொட .எம். - பாராளுமன்ற அலுவலர்
- செல்வி எம்குமாரி . எம்.டி.எ.எல். - பாராளுமன்ற உத்தியோகத்தர்

**குழு அறிக்கைகள்**

**www.parliament.lk** எனும் இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் வழிமுறையைப் பயன்படுத்தி அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெளியீடுகளை தரவிறக்கம் செய்யலாம்.

Select language → Business of Parliament → Committees

Select Legislature (10th Parliament) ← Committee Reports

Select Session (1st Session) → Select Committee Type

Select Committee ← (Comittees for Special Purposes)

(Committee on Public Accounts) → Search

# பொருளடக்கம்

பக்க இல.

அ. தவிசாளரின் குறிப்பு .................................................................. 6

ஆ. சுருக்க அறிக்கை ........................................................................ 8

இ. விசாரணையின் போது கண்டறியப்பட்ட முக்கிய பிரச்சினைகளின் அடிப்படையில்,

(அ) கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

(ஆ) பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்

இ) குழுவின் அவதானிப்புகள்

ஈ) குழுவின் விதப்புரைகள்

உ) பரிந்துரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல் தொடர்பான தகவல்கள் ........................................................................... 9

## <u>தவிசாளரின் குறிப்பு</u>

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் போது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2025.05.09, 2025.06.05, 2025.11.27 ஆகிய திகதிகளில் இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை உள்ளடக்கிய குழுவின் எட்டாவது அறிக்கையை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119(3) இன் ஏற்பாடுகளுக்கமைய இன்றைய தினம் நான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையினால் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அரச நிதி நிருவாகத் தத்துவங்களின் அடிப்படையிலும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளின் மூலம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையிலும் நிதி மேற்பார்வைக் குழுவொன்றாகச் செயற்படும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு பொதுச் செலவினங்களுக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளைக் காட்டும் கணக்குகளையும், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஏனைய கணக்குகளில் இக்குழுவினால் பொருத்தமானவை எனக் கருதப்படும் கணக்குகளையும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசீலிப்பதே இக்குழுவின் முதன்மைப் பணியாகும்.

இந்தப் பணியை சிரமேற்கொள்ளும் போது, கணக்காய்வு எனப்படும் பிந்தைய செயல்முறையிலிருந்து குழுவிற்குக் கிடைக்கும் பங்களிப்பு அளப்பரியது. சரியான கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்ட பலவீனங்களுக்கு உரிய தீர்வுகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல், வினைத்திறனற்ற தன்மைகளை தீவிரமாகத் தடுப்பதற்காக, எதிர்காலத்தில் கடந்தகால குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டுதலையும் அது வழங்குகிறது.

இலங்கை புகையிரதத் திணைக்களம் தொடர்பாக கண்டறியப்பட்ட பல முறைகேடுகளை இந்த விசாரணைகளின் போது குழு அவதானித்தமையே, தெரிவுசெய்யப்பட்ட இந்த நிறுவனம் தொடர்பாக மட்டும் பாராளுமன்றத்தில் விரைவாக ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான காரணமாக அமைந்தது.

நாட்டில் சிறந்ததொரு பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக அரச நிறுவனங்களில் நிலவும் நிதிசார் முறைகேடுகளையும் ஊழல்களையும் தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பது அனைத்து அரச அதிகாரிகளினதும் பொறுப்பாகும். அத்துடன், குழுவின் விதப்புரைரைகளை நடைமுறைப்படுத்துவதன் மீது துரித கவனம் செலுத்துதல், தகுந்த ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அனைத்துச் செயற்பாடுகள் குறித்தும் பின்னாய்வுகளை மேற்கொண்டு அத்தகைய விதப்புரைகளை/உடன்பாடுகளைச் செயற்படுத்துவது குழுவின் முன்னிலையில் அழைக்கப்படும் நிறுவனத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் பொறுப்பாகும்."

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் வெற்றியானது அதில் பங்களிக்கும் அனைத்துப் தரப்பினரினதும் செயற்திறன்மிக்க பங்களிப்பிலேயே தங்கியுள்ளது. ஆகையால், அரச நிதிப் பொறிமுறையை வலுப்படுத்துவதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில், கடந்தகால கணக்குக் குழுக்களில் பணியாற்றிய தவிசாளர்கள் உட்பட அங்கத்துவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், குழுவின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி எனக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கிவரும் தற்போதைய அங்கத்துவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும், பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் குழுவின் பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றுவதற்கு வழங்கும் ஒத்துழைப்பிற்காக கணக்காய்வாளர் தலைமையதிபதி உள்ளிட்ட பணியாட்குழுவினருக்கும், பொதுத் திறைசேரியின் அதிகாரிகளுக்கும், பாராளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுப் பணியகத்தின் அனைத்து அதிகாரிகளுக்கும் இக்குழு தனது நன்றியறிதலையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கின்றது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

**கபீர் ஹஷீம்**
தவிசாளர்
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு

## சுருக்க அறிக்கை

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் **2025.05.09, 2025.06.05**, **2025.11.27** ஆகிய திகதிகளில் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்தின் 2023 நிதி ஆண்டுக்கான கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டதோடு, தற்போதைய செயலாற்றுகை குறித்தும் ஆராயப்பட்டது. பிரதான கணக்கீட்டு அலுவலரினால (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரினால் (க.அ) அளிக்கப்பட்ட விளக்கங்களும் குழுவின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளும் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளன.

**அழைக்கப்பட்ட நிறுவனங்கள் -**

- இலங்கை புகையிரதத் திணைக்களம்

விசாரணை உதவி: தேசிய கணக்காய்வு அலுவலகம்

இந்த விசாரணைகளின் போது, மேற்குறிப்பிட்ட கணக்காய்வு அறிக்கையினால் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகள் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. குழு அமர்வுகளின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்குரிய மேலதிக தகவல்கள் மேற்படி கணக்காய்வு அறிக்கையில் அடங்கியுள்ளன. அந்தக் கணக்காய்வு அறிக்கையை கீழ்க்காணும் இடையிணைப்பியின் ஊடாக பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் -

**2023 ஆம் ஆண்டு:-**

**https://auditorgeneral.gov.lk/web/images/audit-reports/upload/2023/min_dep/1-xxi/Head306Department-of-SriLanka-RailwaysS.pdf**

**விசாரணையின் போது கண்டறியப்பட்ட முக்கிய பிரச்சினைகள் சார்ந்ததாக,**

- **அ. கலந்துரையாடப்பட்ட விடயங்கள்**
- **ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.கஅ)/கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**
- **இ. குழுவின் அவதானிப்புகள்**
- **ஈ. குழுவின் தீர்மானங்களும் விதப்புரைகளும்**
- **உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

**தொடர்பான தகவல்கள்**

- இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ) :-

  செயலாளர், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

- இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலர் (க.அ):-

  பொது முகாமையாளர், இலங்கை புகையிரதத் திணைக்களம்

## 01) கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்

- **விசாரணை செய்யப்பட்ட திகதி** – 2025.05.09

### அ. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)

முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019 சனவரி 12ஆம் திகதிய டீ.எம்.ஏ/01/2019ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு உள்ளக கணக்காய்வு வழிகாட்டுதல்களின் 5.3 ஆவது பந்திக்கமைய ஆண்டொன்றில் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களேனும் நடத்தப்பட வேண்டுமென்ற போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் அது கீழ்க்காணும் அட்டவணைக்கமைய இடம்பெற்றுள்ளது என்பதும் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

*அட்டவணை 1: ஒவ்வொரு வருடத்துக்கும் உரியதாக நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் எண்ணிக்கை*

| வருடம் | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 2021 | 01 |
| 2022 | 02 |
| 2023 | 02 |
| 2024 | 02 |
| 2025 | 01 |

மேற்படி கூட்டங்கள் உரிய முறையில் நடத்தப்படாமை காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்படும் பிரச்சினைகள் உள்ளிட்ட சகல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடி திணைக்களச் செயன்முறைகளைச் சீராக்கும் வாய்ப்பை இலங்கை புகையிரதத் திணைக்களம் தவறவிட்டுள்ளது என்ற விடயம் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

### ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.உ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.உ) விளக்கங்கள்

2025 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை உரிய முறையில் நடத்தி, அதன் மூலம் திணைக்களச் செயன்முறைகளை சீராக்கிக் கொள்வதற்கு எதிர்பார்ப்பதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

ஒரு குறுகிய காலப்பகுதிக்குள் புகையிரதத் திணைக்களத்தின் பல பொது முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டமை, நாட்டில் காணப்பட்ட பெருந்தொற்று போன்ற நிலைமைகள் காரணமாக அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானங்கள், புகையிரதத் திணைக்கள ஊழியர்கள் மேற்கொண்ட தொழிற்சங்க நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை நடத்தத் தவறியுள்ளதையும்,

அப்போதைய புகையிரதத் திணைக்கள நிருவாகம், இந்தப் பிரச்சினைக்கு திட்டவட்டமான ஒரு பதிலை வழங்கத் தவறியுள்ளதையும் குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

1. உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்தி அதன்மூலம் திணைக்களச் செயன்முறைகளை சீராக்கிக் கொள்வதன் மூலம் உள்ளக நிருவாகத்தைப் பலப்படுத்திக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழுவினால் பி.க.அ./க.அ. க்கு,

2. இக்காலப்பகுதியில் கடமையாற்றிய முன்னாள் புகையிரதப் பொது முகாமையாளர்கள் மற்றும் அமைச்சுச் செயலாளர்களை அடுத்துவரும் கூட்டத்திற்கு அழைத்து தாமதத்திற்கான காரணங்கள் குறித்து வினவுவதற்கு குழு தீர்மானித்ததோடு, தேவையான தகவல்களுடன் குறித்த உத்தியோகத்தர்களை குழுவிற்கு முன்னால் அழைக்குமாறு குழுவின் செயலாளருக்கு,

விதந்துரைக்கப்பட்டதோடு பி.க.அ./க.அ. அதற்கு உடன்பட்டார்.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் 2019.01.12ஆம் திகதிய DMA/01/2019ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு ++++ உள்ளகக் கணக்காய்வு வழிகாட்டுதல்களுக்கு அமைய புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் (தவிசாளர்), திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் (அவை கூட்டுநர்), திணைக்களத்தின் பிரதான நிதி அலுவலர் (அங்கத்தவர்), திறைசேரியின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தின் பிரதிநிதியொருவர் (அங்கத்தவர்), கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பிரதிநிதியாக உதவிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது கணக்காய்வு அத்தியட்சகர் (அவதானிப்பாளர்), போக்குவரத்து அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் (அவதானிப்பாளர்) ஆகியோரை உள்ளடக்கியதாக கணக்காய்வு முகாமைத்துவக் குழு நியமிக்கப்படுதல் வேண்டும் எனவும்,

- கலந்துரையாடப்படுகின்ற விடயங்கள் குறித்த தீர்மானங்களை மேற்கொள்வதற்கு புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர் (தவிசாளர்), கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பிரதிநிதி (அவதானிப்பாளர்) மற்றும் திறைசேரியின் பிரதிநிதி (அங்கத்தவர்) ஆகிய அதிகாரிகள் கட்டாயமாக இதில் கலந்துகொள்ள வேண்டும் எனவும், ஏனைய அலுவலர்கள் பிரச்சனைக்குரிய நிலைமை

தொடர்பாக கலந்துரையாடி தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது எனவும்,

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களுக்கு குழுவின் தவிசாளர், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் பிரதிநிதி, திறைசேரியின் பிரதிநிதி ஆகியோரால் கலந்துகொள்ளக்கூடிய ஒரு திகதியைக் குறிப்பதற்கு தொலைபேசி ஊடாக கலந்துரையாடி தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும், பெரும்பாலும் அத்திகதி சுமார் 14 நாட்களுக்கு முன்னர் தீர்மானிக்கப்படுவதோடு பின்னர் ஏற்படக்கூடிய ஏதேனும் விசேட விடயங்களின் அடிப்படையில் குறித்த அலுவலர்களுக்கு அவ்வாறு கலந்துகொள்ள முடியாதிருக்கும் பட்சத்தில், கூட்டங்களை ஒத்திவைப்பதற்கு நேரிடும் எனவும், மீண்டும் ஒரு திகதியைக் குறித்துக் கொள்வது மிகவும் சிரமமான ஒரு விடயமாக இருக்குமாதலால் சிலவேளைகளில் கூட்டங்கள் நடத்தப்படாமல் இருக்க நேரும் எனவும்,

- 2021 ஆம் ஆண்டிலும் இத்தகைய பாதகமான நிலைமையில் கொவிட்-19 பெருந்தொற்றின் மூன்றாவது அலை பரவியதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்குவதாக கணக்காய்வு முகாமைத்துவத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2021.09.06 ஆம் திகதிய DMA/AMC/M/2021/2 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், 2021 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் கூட்டமொன்றை நடத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாகவும் அதன்படி 2021.12.14 ஆம் திகதியன்று கூட்டமொன்று நடத்தப்பட்டுள்ளதாகவும்,

- 2023 ஆம் ஆண்டில் 2023.05.12, 2023.11.16ஆம் திகதிகளில் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றதாகவும், எஞ்சிய கூட்டங்களை நடத்த முடியாத நிலை ஏற்பட்டதாகவும்,

- 2024 ஆம் ஆண்டில் 2024.07.10, 2024.10.16ஆம் திகதிகளில் இரண்டு கூட்டங்கள் நடைபெற்றதாகவும், 2024.12.26 ஆம் திகதி நடைபெறவிருந்த கூட்டம், புகையிரதத் திணைக்களத்துக்கு புதிதாக நியமிக்கப்பட்ட பொது முகாமையாளர் கடமைகளை பொறுப்பேற்கும் நிகழ்வும் அதே நாளில் நடைபெற்றதால் அன்றைய தினம் கூட்டத்தை நடத்த முடியவில்லை என்பதை அறிவிக்கும் 2025.06.04 ஆம் திகதிய MT/04/14/03/01-2025 ஆம் இலக்க கடிதத்துக்குரிய அறிக்கையை புகையிரதத் திணைக்களம் சமர்ப்பித்துள்ளது.

- முகாமைத்துவக் கணக்காய்வு வழிகாட்டுதல்களின் 2.2 (i) ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு காலாண்டுக்கும் ஒரு கூட்டம் என்ற அடிப்படையில் 04 கூட்டங்கள் நடைபெற வேண்டுமென்பதோடு, 2025 ஆம் ஆண்டில் 03 கூட்டங்கள் நடைபெற்றுள்ளதாக கணக்காய்வாளர் தலைமையதிபதி சுட்டிக்காட்டினார்.

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.06.05

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

ஆண்டொன்றில் குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களேனும் நடத்தப்பட வேண்டுமென்ற போதிலும், அதற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை தொடர்பாக இதற்கு முன்னர் கடமையாற்றிய புகையிரதத் திணைக்களத்தின் பொது முகாமையாளர்களிடமும் முன்னாள் அமைச்சுச் செயலாளர்களிடமும் வினவ வேண்டுமென குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைக்கு பி.க.அ./க.அ. இணங்கியதாக கணக்காய்வின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

2019 ஆம் ஆண்டில் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும், 2020, 2021ஆம் ஆண்டுகளில் நிலவிய கொவிட் பெருந்தொற்று நிலைமை காரணமாக உரியவாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கு திணைக்களம் தவறியதாகவும், முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2020.06.02ஆம் திகதிய DMA/AMC/M/2020/5-4ஆம் இலக்க சுற்றுநிருபத்தைப் பின்பற்றி தொடர்புடைய கூட்டங்கள் நடத்தப்படுவது மட்டுப்படுத்தப்பட்டதாகவும் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இ.குழுவின் அவதானிப்புகள்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படாமையினால் கணக்காய்வு ஐயவினாக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளை சரிசெய்து கொள்வதன் மூலம் மேலும் பயனுறுதிவாய்ந்த சேவை நிலைமையொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கு இயலுமை பெறாமை, புகையிரதத்

திணைக்களத்தின் வினைத்திறனின்மை மீது நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

மேற்படி கணக்காய்வு விடயம் குறித்து குழுவினால் அன்றைய தினம் எந்தவொரு விதப்புரையும் வழங்கப்படவில்லை.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 02) வருடாந்த அறிக்கைகளை தாமதித்து பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.05.09

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

2020 ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதிய 02/2020ஆம் இலக்க அரசநிதிச் சுற்றுநிருபத்தின் 12.1ஆம் பந்திக்கமைய திணைக்களம் கணக்காண்டொன்று முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகளைத் தயாரித்து பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்ற போதிலும் 2020, 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த அறிக்கைகள் கீழ்க்காணுமாறு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அட்டவணை 2: ஒவ்வொரு வருடத்திற்கும் உரிய வருடாந்த அறிக்கைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட திகதிகள்

| வருடம் | சபையில் சமர்ப்பிப்பதற்காக முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|
| 2020 | 2023/05/31 |
| 2021 | 2023/05/31 |
| 2022 | 2023/12/12 |
| 2023 | 2025/01/22 |
| 2024 | 2025/08/19 |

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

மேற்படி விடயம் குறித்த குறிப்பிடத்தக்க விளக்கமெதுவும் பி.க.அ./க.அ. இடமிருந்து குழுவிற்கு கிடைக்கப்பெறவில்லை.

**இ.குழுவின் அவதானிப்புகள்**

புகையிரதத் திணைக்களம் பாராளுமன்றத்துக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் மிகவும் வினைத்திறனற்ற முறையில் செயலாற்றியுள்ளதென்பதை குழு அவதானித்தது.

**ஈ.குழுவின் விதப்புரைகள்**

1. எதிர்காலத்தில் தாமதமின்றி வருடாந்த அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு விதந்துரைத்தது.

2. இக்காலப்பகுதியில் கடமையாற்றிய முன்னாள் புகையிரதப் பொது முகாமையாளர்களையும் அமைச்சுச் செயலாளர்களையும் அடுத்த கூட்டத்துக்கு அழைத்து தாமதத்திற்கான காரணங்கள் குறித்து வினவுவதற்கு குழு தீர்மானித்ததோடு, தேவையான தகவல்களுடன் குறித்த அதிகாரிகளை குழுவிற்கு முன்னால் அழைக்குமாறு குழு குழுவின் செயலாளருக்கு விதந்துரைத்தது.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- 2020, 2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கொரோனா பெருந்தோற்று நிலைமை காரணமாக பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாகவும், அதன் காரணமாக அலுவலகங்களுக்கு வரும் பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை பெரிதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும், அதன் காரணமாக செயலாற்றுகை அறிக்கைக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்பட்ட காரணத்தினால் 2020, 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கைகளை 2022 ஆம் ஆண்டிலேயே தயாரிக்க முடிந்ததாகவும்,

- நிலவும் பணியாட்டொகுதியினர் பற்றாக்குறையின் பேரில் 09 உப திணைக்கங்களிடமிருந்து தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது ஏற்படுகின்ற தாமதம் காரணமாக 2023 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்பட்டதெனவும்,

- 2024 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கையின் வரைபு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துக்கு 2025/06/02 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025/05/30 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 2/2025 ஆம் இலக்க அரசநிதிச் சுற்றுநிருபத்திற்கமைய 2025/06/30 ஆம் திகதிக்கு முன்னர் 2024 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,

  குறிப்பிட்டு 2025.06.04 ஆம் திகதிய MT/04/14/03/01-2025 ஆம் இலக்க கடிதத்தோடு தொடர்புடைய அறிக்கையை புகையிரதத் திணைக்களம் சமர்ப்பித்துள்ளது.

## 03) <u>கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை</u>

❖ <u>**விசாரணை செய்யப்பட்ட திகதி**</u> - 2025.05.09

**அ. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

2022 தொடக்கம் 2024 வரை வெளியிடப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களில் பதிலளிக்கப்படாத 27 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்படுவதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

புகையிரதத் திணைக்களத்தில் 09 உப திணைக்களங்கள் காணப்படுவதன் காரணமாகவும் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாகவும் கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதிலளிப்பதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக பிரதான நிதி அதிகாரி (CFO) தெரிவித்தார். அத்துடன், 2024 ஆம் ஆண்டில் புகையிரதத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட 51 கணக்காய்வு ஐயவினாக்களில் 36 ஐயவினாக்களுக்கு இன்றளவில் பதிலளிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைப்பதைக் குறைத்துக்கொள்வதன் மூலமும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலமும் திணைக்களச் செயன்முறைகளைச் சீரமைக்க முடியுமெனவும், இக்காலப்பகுதியில் கடமையாற்றிய முன்னாள் புகையிரதப் பொது

முகாமையாளர்கள், அமைச்சுச் செயலாளர்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூடிய அதிகாரிகளை அடுத்துவரும் கூட்டத்துக்கு அழைத்து தாமதத்திற்கான காரணங்களை வினவுவது பொருத்தமானதாக இருக்குமென்று குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

1. கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைப்பதைக் குறைத்துக்கொள்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்கள் மூலம் திணைக்களச் செயன்முறைகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு புகையிரதப் பொது முகாமையாளருக்கு (க.அ.) குழு விதந்துரைத்தது.

2. இக்காலப்பகுதியில் கடமையாற்றிய முன்னாள் புகையிரதப் பொது முகாமையாளர்கள், அமைச்சுச் செயலாளர்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை அடுத்த கூட்டத்துக்கு அழைத்து தாமதத்துக்கான காரணங்களை வினவுவதற்கு குழுவினால் தீர்மானிக்கப்பட்டதோடு தேவையான தகவல்களுடன் குறித்த அலுவலர்களை குழுவிற்கு அழைக்குமாறு குழுவின் செயலாளருக்கு குழு விதந்துரைத்து.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆம் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்துக்கு 2022 தொடக்கம் 2024 வரை கடமையாற்றிய முன்னாள் புகையிரதப் பொது முகாமையாளர்கள், அமைச்சுச் செயலாளர்கள் உள்ளிட்ட பொறுப்புவாய்ந்த அலுவலர்களை அழைத்து தாமதத்திற்கான காரணங்கள் வினவப்பட்டதோடு அப்போதைய சூழலில் உலகளவில் பரவிய கொவிட் பெருந்தொற்று காரணமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், புகையிரத ஊழியர்களின் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் காரணமாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை ஒத்திவைப்பதற்கு/இரத்துச் செய்வதற்கு நேரிட்டதாக குழுவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது.

- 2022 ஆம் ஆண்டுக்குரிய 67 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்பட்டதாகவும் அவ்வனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும்,

- 2023 ஆம் ஆண்டுக்குரிய 53 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்பட்டதாகவும், அவ்வனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும்,

- 2024 ஆம் ஆண்டுக்குரிய 51 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்பட்டதாகவும், அவற்றில் 41 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், 10 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படவுள்ளதாகவும்,

- 2025 ஆம் ஆண்டுக்குரிய 25 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்பட்டதாகவும், அவற்றில் 07 ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதாகவும், 18 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படவுள்ளதாகவும்,

2025.06.04 ஆம் திகதிய M/04/14/03/01-2025 ஆம் இலக்க கடிதத்தோடு தொடர்புடைய அறிக்கையில் குறிப்பிடப்பட்டு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ <u>விசாரணைசெய்யப்பட்ட திகதி</u> - 2025.06.05

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

2022 தொடக்கம் 2024 வரையான காலப்பகுதியில் பதிலளிக்கப்படாத 27 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்பட்டதாக குழு சுட்டிக்காட்டியது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

நாட்டின் அப்போதைய சூழ்நிலைகள் மற்றும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தீர்மானங்கள் காரணமாக உரிய முறையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்த முடியவில்லை என புகையிரதத் திணைக்களம் அபிப்பிராயம் தெரிவித்தது.

**இ.குழுவின் அவதானிப்புகள்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவதன் முக்கிய நோக்கம், கணக்காய்வு ஐயவினாக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகளைச் சீர்செய்வதன் மூலம் மேலும் பயனுறுதிவாய்ந்த சேவை நிலைமையொன்றை உருவாக்குவதே என்று குழு அபிப்பிராயம் தெரிவித்தது.

**ஈ.குழுவின் விதப்புரைகள்**

மேற்படி கணக்காய்வு விடயம் குறித்து அன்றைய தினம் எந்தவொரு விதப்புரையும் குழுவினால் வழங்கப்படவில்லை.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 04) <u>வருடாந்த பெறுகைத் திட்டத்திற்கு உரிய அங்கீகாரத்தைப் பெறாமையும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமையும்</u>

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

02/2020ஆம் இலக்க மற்றும் 2020ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28ஆந் திகதிய அரசநிதிச் சுற்றுநிருபத்தின் 04ஆவது பந்திக்கமைய பெறுகைத் திட்டத்திற்காக பிரதான கணக்கீட்டு அலுவலரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற போதிலும், 2024ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்திற்குரிய அங்கீகாரம் பெறப்படவில்லை என கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

புகையிரதத் திணைக்களத்திற்கான கொள்வனவுகள் "வருடாந்த தேவைப் பட்டியலை (Annual Requirement List)" அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், 2025ஆம் ஆண்டுக்குரிய உத்தேச பெறுகைத் திட்டம் அங்கீகாரத்திற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

2006ஆம் ஆண்டு அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட பெறுகை வழிகாட்டுநெறிகள், புகையிரதத் திணைக்களத்தால் 2024ஆம் ஆண்டு வரையும் செயற்படுத்தப்படாமை குழுவின் கடுமையான விசனத்திற்கு உள்ளானது.

அவ்வாறே, பெறுகைத் திட்டத்தின் கண்காணிப்புப் பணிகள் பெறுகை ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால், அரசநிதித் திணைக்களத்தால் மேற்பார்வை செய்யப்படுவதில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

1. உரிய காலப்பகுதியில் சேவையில் ஈடுபட்ட முன்னாள் புகையிரதப் பொது முகாமையாளர்கள், அமைச்சின் செயலாளர்கள் உட்பட பொறுப்புக் கூற வேண்டிய அதிகாரிகளை அடுத்த கூட்டத்திற்கு அழைத்து இவ்விடயத்துடன் ஏற்புடைய காரணங்களை வினவுவதற்கு குழு தீர்மானித்ததுடன் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொண்டு அவ்வதிகாரிகளை குழுவுக்கு அழைக்குமாறு குழுவின் செயலாளருக்கு குழு விதந்துரைத்தது.

2. 2025ஆம் ஆண்டுக்கு உரியதான பெறுகைத் திட்டமொன்றை ஒரு வார காலத்திற்குள் (2025.05.16ஆந் திகதியளவில்) நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழு க.அ. இற்கு விதந்துரைத்தது.

**உ. பரிந்துரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்**

- 2025ஆம் ஆண்டுக்குரிய உத்தேசப் பெறுகைத் திட்டம் போக்குவரத்து மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக M/04/14/03/01-2025 மற்றும் 2025.06.04 ஆம் திகதிய கடிதத்துடன் தொடர்புடைய அறிக்கையில் இணைப்பு–05 இன் மூலம் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025.06.05**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

2024, 2025 ஆம் ஆண்டுகளுக்கும் பெறுகைத் திட்டங்கள் அனுமதித்துக்கொள்ளப்படாமை குறித்து கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

2024ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டம் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு தாமதித்து சமர்ப்பிக்கப்பட்டது எனவும், 2025ஆம் ஆண்டுக்குரிய பெறுகைத் திட்டம் இன்றளவில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ.குழுவின் அவதானிப்புகள்**

சகல அரச நிறுவனங்களும் வருடந்தோறும் திசெம்பர் மாதம் 10ஆந் திகதியளவில் தமது நிறுவனத்தின் பெறுகைத் திட்டத்தை பிரதான கணக்கீட்டு அலுவலர் ஊடாக அனுமதித்துக்கொள்ள வேண்டும் என்பதுடன் அதன் பிரதிகளை அரசநிதித் திணைக்களத்திற்கும், பெறுகை ஆணைக்குழுவிற்கும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கும் சமர்ப்பிக்க வேண்டுமெனவும், பெறுகைச் செயன்முறையில் பலவீனங்கள் காரணமாக திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்டுள்ள விலையுயர்ந்த இயந்திரங்களும் கருவிகளும் குறை பயன்பாடு கொண்டதாக்க காணப்படுவதாகவும் குழு அவதானித்தது.

**ஈ.குழுவின் விதப்புரைகள்**

பெறுகைச் செயன்முறையில் பலவீனங்கள் காரணமாக திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட விலையுயர்ந்த இயந்திரங்கள்/ இயந்திரகூடங்கள் மற்றும் உபகரணங்கள் குறை பயன்பாடுடையதாகக் காணப்படுகின்றமை தொடர்பாக கவனம் செலுத்திய குழு, 2012ஆம் ஆண்டு தொடக்கம் அவ்வாறான கொள்வனவுகளின் போது உரிய சாத்தியவள ஆய்வை மேற்கொண்டு, உரிய பெறுகைச் செயன்முறை பின்பற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பான அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு குழு விதந்துரைத்தது.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்**

2012ஆம் ஆண்டின் பின்னர் இரத்மலானை பிரதான இயந்திர உப திணைக்களத்திற்கு சுமார் 58 பிரதான இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன எனவும், அவற்றில் Vertical Hydraulic Wheel 500T, Hydraulic Wheel Press, Universal Dynamic Balancing Machine, Injector Pump Testing Machine மற்றும் Common Rail Injector Tester போன்ற 05 இயந்திரங்கள் குறை பயன்பாடுடையதாகக் காணப்படுகின்றன எனவும் MT/04/14/03/01-2025 மற்றும் 2025.11.13ஆந் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் இணைப்பு 14,15,16,17 மற்றும் 18 இன் கீழ் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 05) செயற்பாட்டுத் திட்டம்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

02/2020 இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் மாதம் 28ஆந் திகதி அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 03ஆவது பந்திக்கமைய எதிர்வரும் வருடத்திற்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தை நடப்பாண்டின் டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்குள் தயாரித்து பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற போதிலும், புகையிரதத் திணைக்களத்தால் 2023, 2024ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள் தாமதித்து முறையே 2023ஆம் ஆண்டு சனவரி மாதம் 16ஆம் திகதி மற்றும் 2024ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கமளிப்புகள்**

2025ஆம் ஆண்டுக்குரிய திணைக்களத்தின் செயற்பாட்டுத் திட்டம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக பிரதான கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

ஏற்புடையதன்று.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இந்தக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக குழு விதப்புரைளை வழங்கவில்லை.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 06) புதிய புகையிரதப் பாதையை அமைக்கும் பொருட்டு கழற்றி அகற்றப்பட்ட பழைய ஸ்லீப்பர் கட்டைகள் மற்றும் புகையிரதத் தண்டவாளங்கள், மஹவ முதல் ஓமந்தை வரை புகையிரதப் பாதையின் இரு மருங்கிலும் பயன்படுத்தப்படாதிருக்கும் நிலையில் அவை அழிவடைதல்.

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

இந்திய கடன் சேவை ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவியின் அடிப்படையில், மஹவ – அனுராதபுரம் – ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை 91.26 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிறைவுசெய்வதற்கு 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மஹவ தொடக்கம் ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை அமைக்கும் கருத்திட்டம் தொடர்பில் புகையிரதப் பாதையை புதிதாக அமைப்பதற்காக பழைய ஸ்லீப்பர் கட்டைகளையும் தண்டவாளங்களையும் கழற்றி அகற்ற வேண்டும். ஒப்பந்தத்தின் 7.1வது பிரிவின்படி அவற்றைக் கழற்றி அருகிலுள்ள புகையிரத நிலையத்திற்கு கொண்டு சென்று ஒப்படைக்கப்பட வேண்டுமெனினும் ஒப்பந்தப்படி இந்த நிபந்தனை பூர்த்திசெய்யப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. ஒப்பந்தகாரர் முதலாம் மற்றும் இரண்டாம்

கட்டங்களில் கழற்றி அகற்றிய 159 ,626 ஸ்லீப்பர் கட்டைகள் மற்றும் 106, 464 தண்டவாளங்கள், மஹவ முதல் ஓமந்தை வரையான புகையிரதப் பாதையின் இரு மருங்கிலும் 1,024 இடங்களில் குவிக்கப்பட்டிருந்தன. 2025 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் அவை பயன்படுத்தப்படாத நிலையில் அழிவடைந்து வருகின்றமை கள ஆய்வின் போது அவதானிக்கப்படுவதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

ஒரே நேரத்தில் 65 கிலோமீட்டர் நீளமான பாதை கழற்றி அகற்றப்பட்டமையால், அப்பழைய ஸ்லீப்பர் கட்டைளையும் தண்டவாளங்களையும் அருகிலுள்ள புகையிரத நிலையங்களில் போதிய இடவசதி இல்லாத நிலையில் அவற்றை களஞ்சியப்படுத்துவதற்கான வசதிகள் இல்லாத நிலையில் அவற்றை அங்கு குவித்துவைக்க நேரிட்டதாகவும், பயன்படுத்தக்கூடிய சில ஸ்லீப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளவற்றை கேள்வி விலை கோரி விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், பயணிகள் புகையிரதங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதும், சேவைப் புகையிரதங்களுக்கு காணப்படும் பற்றாக்குறையும் காரணமாக இத்தாமதம் ஏற்பட்டுள்ளதாக அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

திட்டமிடல் இன்றிய செயற்பாடும் சரியான கருத்திட்ட முன்மொழிவைத் தயாரித்திருக்காமையும் இந்தப் பிரச்சினைக்குரிய முக்கிய காரணம் என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

ஸ்லீப்பர் கட்டைளையும் தண்டவாளங்களையும் வகைப்படுத்தி உரிய இடங்களிலிருந்து அகற்றுவதற்கான திட்ட அறிக்கையை 2 வாரங்களுக்குள்

சமர்ப்பிக்க வேண்டுமென திணைக்களத்தின் க.அ. இற்கு குழு விதந்துரைத்தது.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்**

புகையிரதப் பொது முகமையாளரின் மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் PS/LEG/COPA/02/DEPT(10)04/2025 தொகுதி II மற்றும் 2025/06/04 திகதிய கடிதம் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளவாறு பயன்படுத்தக்கூடிய ஸ்லீப்பர் கட்டைகளைத் தெரிவு செய்ததன் பின்னர் அவற்றை கண்காணிப்பாளர் பொறியியல் பிரிவுகளுக்கு கொண்டு செல்வதற்கு டெண்டர் செய்யப்பட்டுள்ள அளவு தொடர்பான தகவல்கள் (இணைப்பு 03 மூலம்) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **<u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.11.27</u>**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

- 2025 நவம்பர் 14ஆந் திகதியாகும்போதும் திட்டமொன்று குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும்,
- ஸ்லீப்பர் கட்டைகளும் தண்டவாளங்களும் வகைப்படுத்தப்படவில்லை என்பதையும்,
- 24,771 ஸ்லீப்பர் கட்டைகள் மட்டுமே உரிய இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலும் 58,217 ஸ்லீப்பர் கட்டைளைக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது என்பதையும்,
- இன்றளவில் 62,389 அடி தண்டவாளங்கள் உரிய வீதிப் பிரிவுகளுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள போதிலும், 203,199 அடி அளவு இன்னும் கொண்டு செல்லப்பட வேண்டியுள்ளது என்பதையும்,

- மஹவ - ஓமந்தை கருத்திட்ட மதியுரை நிறுவனத்தின் அறிக்கைகளுக்கமைய 290,928 அடி தண்டவாளம் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், திணைக்களத்தின் அறிக்கைகளுக்கமைவாக 265,588அடி தண்டவாளமே காணப்படுவதால் 25,340அடி தண்டவாளம் குறைவாக காணப்படுகிறது என்பதையும் கணக்காய்வு சுட்டிக்காட்டியது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

ஸ்லீப்பர் கட்டைகள் பாதையின் இரு மருங்கிலும் இன்னும் குவித்துவைக்கப்பட்டிருப்பதால் போக்குவரத்து தொடர்பான சரியான திட்டமொன்றைத் தயாரிப்பதில் சிரமம் நிலவுகிறது எனவும், சேவைப் புகையிரம் மூலம் இவற்றை போக்குவரத்துச் செய்ய வேண்டுமெனவும், ஒரு தடவையில் சுமார் 400 ஸ்லீப்பர் கட்டைகள் அல்லது 300 தண்டவாளங்கள் என்ற சிறு அளவினையே போக்குவரத்துச் செய்ய முடிவதால் இதற்கு அதிக காலம் செல்லும் எனவும், சாதாரண புகையிரத ஓட்ட நேர அட்டவணை காரணமாக இப்பணியை மேற்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன எனவும் பிரதான பொறியியலாளர் (வீதிகள் மற்றும் கைத்தொழில்கள்) தெரிவித்தார்.

ஓமந்தை கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்தத்தின் 7ஆவது பிரிவின் பிரகாரம், ஒப்பந்த நிறுவனம் கருத்திட்டத்திலிருந்து அகற்றும் புகையிரத தண்டவாளங்களையும் ஸ்லீப்பர் கட்டைகளையும் அருகிலுள் புகையிரத நிலையத்திற்கு கொண்டு செல்வதாகவும், அருகிலுள்ள புகையிரத நிலையத்தில் மாற்றம் ஏற்படுமெனில் கருத்திட்ட முன்மொழிவாளரால் புகையிரதத் திணைக்களத்திற்கு அதற்கான கொடுப்பனவொன்றைச் செலுத்த வேண்டுமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கருத்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

எனினும் கருத்திட்டம் தாமதித்து ஆரம்பிக்கப்பட்டமை, படிநிலை 01 மற்றும் படிநிலை 02 இற்கிடையில் கணிசமான காலம் காணப்படாமை, பணிகள் நிறைவடைந்தவுடன் புகையிரதம் பயணிப்பதற்கு பாதையைப் பயன்படுத்துதல் போன்ற காரணங்களால் திணைக்களம் மற்றும் உரிய தரப்பினர் இடையே பணம் செலுத்தாமை தொடர்பான உடன்பாடு

எட்டப்பட்டதாகவும், ஸ்லீப்பர் கட்டைகளையும் தண்டவாளங்களையும் போக்குவரத்துச் செய்யாததன் காரணமாக ஏனைய தரப்பினருக்கு கிடைக்கப் பெற்ற நிதிசார் அனுகூலங்களை அந்நிறுவனத்தின் அடுத்த விலைப் பட்டியலிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கருத்திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

ஸ்லீப்பர் கட்டைகள் மற்றும் புகையிரத தண்டவாளங்களில் பயன்படுத்தக்கூடிய நிலையிலுள்ள தண்டவாளங்களை வகைப்படுத்தி வேறு புகையிரதப் பாதைகளின் பராமரிப்புக்காக பயன்படுத்துவதாகவும், பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள தண்டவாளங்களை உரிய குழுவின் மற்றும் கைத்தொழில் அமைச்சின் பரிந்துரைக்கமைய தரைப்படை, கடற்படை, போகல சுரங்கம் போன்ற அரச நிறுவனங்களுக்கு வழங்குவதாகவும், எந்தவொரு அரச நிறுவனத்திற்கும் தண்டவாளங்களை இலவசமாக வழங்கப் போவதில்லை எனவும் அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

எஞ்சியப் பணிகளை ஆரம்பிப்பதற்கு இந்திய EXIM வங்கியின் உதவி தொடர்ந்தும் கிடைக்காததால், அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று விசேட குழுவொன்றை நியமித்து இலங்கை அரசாங்கத்தின் நிதியை வழங்க முடியுமா என்பது தொடர்பாக கலந்துரையாடப்பட உள்ளது எனவும், அக்குழுவை ஒரு வாரத்திற்குள் நியமித்து அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு மிக விரைவாக அப்பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே குழுவின் அவதானிப்பாக காணப்பட்டது. இவ்விடயம் இதற்கு முன்னர் இடம்பெற்ற குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்டு, பரிந்துரைக்கப்பட்ட அறிக்கையை தற்போது வரை வழங்காமை தொடர்பாக குழு தனது அதிருப்தியை வெளியிட்டது.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

தொடர்ச்சியாக நிகழும் ஸ்லீப்பர் கட்டைகள் மற்றும் தண்டவாளங்களை அகற்றும் பணியை முறையாக மேற்கொள்வதற்கான திட்டமொன்றை குழுவுக்கு வழங்கக்கூடிய கால எல்லை தொடர்பாக 3 வாரங்களுள் (2025.12.24 ஆம் திகதியளவில்) குழுவுக்கு அறியத் தருவதாக பி.க.அ./ க.அ. குழுவுடன் இணங்கினார்.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்**

- மஹவ மற்றும் அனுராதபுரத்திற்கு இடைப்பட்ட புகையிரதப் பாதையை புதிதாக நிர்மாணிக்கும் போது 80 இறாத்தல் வகையைச் சார்ந்த 111,195.67 மீட்டர் தண்டவாளங்கள், 90 இறாத்தல் வகையைச் சார்ந்த 22,474.63 மீட்டர் தண்டவாளங்கள் மற்றும் 85,719 கான்கிரீட் ஸ்லீப்பர்கள் மஹவ மற்றும் அனுராதபுரம் புகையிரதப் பாதையிலிருந்து கழற்றி அகற்றப்பட்டன எனவும்,

- இன்றளவில், மேற்படி கழற்றி அகற்றப்பட்ட பொருட்களில் கணிசமானவை வேறு புகையிரதப் பாதைகளை அபிவிருத்திசெய்வதற்கும் புனரமைப்பதற்கும் வெளியேற்றப்பட்டன என்பதையும், 80 இறாத்தல் வகையைச் சார்ந்த 72,330.42 மீட்டர் தண்டவாளமும் 90 இறாத்தல் வகையைச் சார்ந்த 3,672.89 மீட்டர் தண்டவாளம் மற்றும் 55,041 கான்கிரீட் ஸ்லீப்பர்கள் மாத்திரமே காணப்படுகின்றன என்பதையும்,

- புகையிரதப் பாதையின் பாலங்ளைப் பழுதுபார்த்தல், தித்வா சூறாவளியின் பின்னர் தற்காலிகமாக அமைக்கப்பட்ட புகையிரதப் பதைகளின் சீரமைப்புப் பணிகளை நிறைவு செய்தல் மற்றும் யானைகள் பயணிப்பதற்காக காசிகோட்டை பகுதியில் அமைக்கப்படும் சுரங்கப் பாலத்தின் நிர்மாணப் பணிகளுக்காக கழற்றி அகற்றப்பட்ட பாகங்களைப் பயன்படுத்துவதாகவும், இவ்விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்றை MT/04/14/03/01-2025(Vol-ii) மற்றும் 2026.02.16ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- இதன் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு MT/04/14/03/01-2025 மற்றும் 2025.12.17ஆந் திகதிய கடிதம் மூலம் காலநீடிப்பு கோரப்பட்டது. அது, 2026.06.30ஆந் திகதி வரை PS/LEG/COPA/02/Dept/(10)/04 மற்றும் 2026.01.05ஆந் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டது.

## 07) மஹவ - அனுராதபுரம் வரையிலான பகுதியின் சமிக்ஞை முறைமை

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> **- 2025.05.09**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

இப்பாதையை அமைப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்கும் போது மஹவ முதல் அனுராதபுரம் வரையிலான பகுதியின் சமிக்ஞை முறைமையில் இவ்வொப்பந்த விடயப்பரப்பிலிருந்து நீக்கி பாதையை மாத்திரம் அமைப்பதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் சமிக்ஞை முறைமையை அமைக்கும் பணி அதனோடு இணைந்ததாக மேற்கொள்ளப்படவில்லை எனவும், 2025 ஏப்ரலில் சமிக்ஞை முறைமை இல்லாமல் புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டது எனவும், சமிக்ஞை முறைமையை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படாததன் காரணமாக புகையிரதப் பாதைகளின் வேகத்தை மணித்தியாலத்திற்கு 100 கி.மீ ஆகப் பேணிச் செல்வதற்கு திட்டமிட்ட போதும், இப்பிரச்சினை காரணமாக சுமார் மணித்தியாலத்திற்கு 60 கி.மீ. வேகத்தில் புகையிரதங்கள் பயணித்தமையால் புகையிரதப் பாதைகளை அமைப்பதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்த்த இலக்குகளை அடைவதற்கு முடியாமல் போனதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

புகையிரதப் பாதையின் அக்குறிப்பிட்ட பகுதியில் சமிக்ஞை முறைமையுடன் தொடர்புடைய கருத்திட்டத்தை 2025 மே மாதத்தில் (குழுக் கூட்டம் இடம்பெற்ற மாதத்தில்) ஆரம்பிப்பதற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், தற்போது சமிக்ஞைத் திணைக்களத்தின் தலையீட்டுடன் செனரத்கம, தலாவ, கல்கமுவ ஆகிய புகையிரத நிலையங்களுக்கு அடிப்படை சமிக்ஞை முறையொன்று வழங்கப்பட்டுள்ளது எனவும் மஹவ – ஓமந்தை வரையான புகையிரதப் பாதையை அமைக்கும் கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் குழுவிடம் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

இப்பாதையை அமைப்பதற்கான தொடக்கத் திட்டத்தில் சமிக்ஞை முறைமை உட்சேர்க்கப்படாததால் செலவு அதிகரித்துள்ளது. சரியான சாத்திய வள ஆய்வை மேற்கொள்ளாமல் இவ்வாறானதொரு கருத்திட்டத்தை ஆரம்பித்தமையே சிக்கல்நிலைக்கு காரணமாக அமைந்தது என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

குழுவால் இக்கணக்காய்வு விடயத்திற்கான விதப்புரைகள் வழங்கப்படவில்லை.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 08) காட்டு யானைகள் புகையிரதத்துடன் மோதுதல்

❖ **<u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.05.09**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

காட்டு யானை விபத்துகளைக் குறைப்பதற்காக வனசீவராசிகள் திணைக்களத்துடன் இணைந்து 2018 ஒற்றோபர் 11 முதல் 15 ஆந் திகதி வரை அளவாய்வுகளை மேற்கொண்டு, காட்டு யானைகள் புகையிரதத்துடன் மோதிய இடங்களும் புகையிரதப் பாதையில் யானைகள் நடமாடும் இடங்களும் குறித்து ஆய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், காட்டு யானை மோதல்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, புகையிரதத்தில் காட்டு யானைகள் மோதுவதால் ஏற்படும் விபத்துக்கள் தற்போது பெரும் துன்பியல் நிகழ்வாக மாறியுள்ளது. 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையிலான 05 ஆண்டு காலப்பகுதியில் புகையிரதத்தில் மோதியதால் உயிரிழந்த காட்டு யானைகளின் எண்ணிக்கை

53 ஆகவும், காயமடைந்த காட்டு யானைகளின் எண்ணிக்கை 17 ஆகவும் பதிவாகியுள்ளதாக கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

கடந்த 25 ஆண்டு காலப்பகுதியில் காட்டு யானைகள் புகையிரதத்தில் மோதியதால் 138 இறப்புக்கள் பதிவாகியுள்ளன என்றும், யானைகள் கடக்கும் இடங்களில் பெரும் பரவல் காணப்படுவதாகவும், கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட காலப்பகுதியில் இது அதிகரித்துள்ளதாகவும் அக்கருத்திட்டப் பணிப்பாளர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

இப்பிரச்சினைக்குரிய தீர்வாக, யானைகள் கடந்து செல்வதற்கு வசதியாக சுமார் 5 மீட்டர் உயரம் கொண்ட சுரங்கப் பாதைகளை அமைத்தல், புத்தாக்குநர்கள் சங்கத்துடன் கலந்துரையாடி தீர்வுகளைக் காணுதல் போன்ற நீண்டகாலத் தீர்வுகளும், புதிய வலுத் தொகுப்புகளை வலு ஊடுகடத்தல் தொகுதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் குறுகிய தூரத்தில் புகையிரதத்தை நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்தல், இருபுறமும் உள்ள வனப்பகுதிகளை அகற்றுவதன் மூலம் புகையிரதப் பாதை தெளிவாகத் தெரிவதற்கு வழிவகை செய்தல், யானைகள் கடக்கும் இடங்களைக் காட்டும் பெயர்ப் பலகைகளை புகையிரத ஓட்டுநர்களுக்குத் தெளிவாகத் தெரியும்படி சீரமைத்தல் மற்றும் காட்டு யானைகள் நடமாடும் இடங்கள் குறித்து வனசீவராசிகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் புகையிரத ஓட்டுநர்களைப் பங்கேற்கச்செய்தல் போன்ற குறுகிய கால நடவடிக்கைகள் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக கணக்கீட்டு அலுவலர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

இவ்விபத்துகளைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இந்தக் கணக்காய்வு விடயம் தொடர்பாக குழுவினால் விதப்புரை எதுவும் முன்வைக்கப்படவில்லை.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 09) திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்களை அறவீடுசெய்தல்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> **- 2025.05.09**

**அ. கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

புகையிரதம் மூலம் சுண்ணாம்புக்கல் கொண்டு சென்றமைக்காக சியெம் சிட்டி சிமெண்ட் (லங்கா) நிறுவனத்திடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் ரூ .2,187,326 எனவும், புகையிரதம் மூலம் சரக்குகளைக் கொண்டு சென்றமைக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 31 நிறுவனங்களிடமிருந்து ரூ. 169,769,006 நிலுவையாக உள்ளதுடன், அதில் 20 நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூ. 23,457,706 தொகையானது 07 முதல் 44 ஆண்டுகள் வரையிலான பழைய நிலுவைகள் எனவும் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டது. 2024 திசெம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானம் ரூ. 1,256,596,206 ஆக இருந்ததுடன், புகையிரதத் திணைக்கள பண்டகசாலை வருமானம், நிலையான உணவகங்கள், வர்த்தக விளம்பரங்கள், பிரச்சாரம் மற்றும் சிறிய விற்பனை நிலையங்கள் தொடர்பான நிலுவை வருமானம் ரூ. 519,930,236 ஆகும். அத்துடன் புகையிரத மூலம் சரக்குப் போக்குவரத்துக்காக 2021 ஆம் ஆண்டு இறுதியளவில் 47 நிறுவனங்களிடமிருந்து ரூ 140,784,351, 2020 ஆம் ஆண்டில் புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானம் ரூ. 848,334,880, 2020 ஆம் ஆண்டில் ஏனைய நிலுவை வருமானங்கள் ரூ .556,205,725, கடைகள் மற்றும் 03 பண்டகசாலைகளின் நிலுவை வாடகை ரூ. 36,790,032 என்ற அடிப்டையில் மொத்தம் ரூ .1,582, 114,988 நிலுவையாக உள்ளதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

### ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்

2023 ஆம் ஆண்டில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைக்கமைய, குறுக்குக் குறிப்பு முறையைப் பயன்படுத்தி தற்போது பணம் அறவிடப்பட்டு வருவதுடன், அதன் மூலம் 2024 ஆம் ஆண்டில் ரூ. 3,283 மில்லியன் (98%) மற்றும் 2023 ஆம் ஆண்டிற்குரிய 2,845 அனுமதிப்பத்திரங்களில் 2,641 க்கான நிலுவைப் பணத்தை அறவிட முடிந்துள்ளதாகவும், கடந்த சில ஆண்டுகளில் அரச நிறுவனங்களுக்குப் போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்காத காரணத்தினால் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிட முடியாமல் போனதாகவும் புகையிரதத் திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் குழுவின் முன்னிலையில் தெரிவித்தார்.

அத்துடன், வர்த்தக விளம்பரங்கள் தொடர்பாக 2000 ஆம் ஆண்டில் ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட போதிலும், அந்த ஒப்பந்தத்தின்படி பணம் செலுத்தப்படாத காரணத்தினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், திணைக்கள அனுமதியின்றி பதுளை புகையிரத நிலையத்தின் ஓய்வறைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட்டமை தொடர்பாக சம்பந்தப்பட்ட அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் புகையிரதத் திணைக்கள அலுவலர்கள் குழுவின் முன்னிலையில் தெரிவித்தனர்.

மேலும், புகையிரதத் திணைக்களத்திலுள்ள வருமானம் ஈட்டும் சொத்துக்கள் தொடர்பான தரவுக் கட்டமைப்பு ஒன்று பராமரிக்கப்பட்டு வருவதாக பிரதான கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

புகையிரதம் மூலம் சரக்குப் போக்குவரத்து, புகையிரத அனுமதிப்பத்திரக் கட்டணங்கள், கடைகள் மற்றும் பண்டகசாலை வாடகை மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்களை அறவிடுவதில் பலவீனமான நிலை காணப்படுவதாக குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானங்களின் தற்போதைய நிலை குறித்த முழுமையான அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குமாறு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்குக் குழு விதந்துரைத்தது.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானங்களின் தற்போதைய நிலை குறித்த முழுமையான அறிக்கை M/04/14/03/01-2025 மற்றும் 2025.06.04 ஆந் திகதியிட்ட கடிதத்திற்கு அமைய அறிக்கையின் இணைப்பு 07 மூலம் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **<u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.11.27**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

2020 ஆம் ஆண்டில் புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானமான ரூ.848,334,880 அறவிடப்படாமை குறித்து குழு கலந்துரையாடியதுடன், புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானங்களின் தற்போதைய நிலை குறித்த தகவல்கள் அடங்கிய அறிக்கை 2025 யூன் மாதம் 03 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,

புகையிரத அனுமதிப்பத்திர நிலுவை வருமானம் தொடர்பாக, அனுமதிப்பத்திர 1 கணக்கின்படி 2020 திசெம்பர் 31 ஆந் திகதி காணப்படும் மீதி ரூ .769,194 ஆகும். அது, 1987 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்து காணப்படும் மீதி எனவும், அது தொடர்பான ஆவணங்களை தற்போது கண்டெடுக்க முடியாதுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டிருந்ததாகவும்,

அனுமதிப்பத்திர 2 கணக்கில் 2025 செத்தெம்பர் 30 ஆந் திகதி வரை நிலுவையாகவுள்ள மீதி ரூ .956,110,609 என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

அத்தினம் வரை நிலுவை அனுமதிப்பத்திர வருமானம் 966 மில்லியன் ரூபாய் எனவும், இதில் அதிகப்படியான சதவீதத்தை தென் மாகாணக் கல்வித் திணைக்களம் செலுத்த வேண்டும் எனவும், அத்தகை 103 மில்லியன் ரூபாய் எனவும், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், முதலில் இவ்வருடத்திற்கான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கும் பின்னர் முந்தைய ஆண்டுகளின் நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கும் நினைவூட்டல்கள் செய்யப்படுவதாகவும், 2025 ஆம் ஆண்டிற்குரிய நிலுவைப் பணத்தை இவ்வருடத்திற்குள்ளேயே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், இந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்குத் திறைசேரியின் உதவியையும் பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

புகையிரதத் திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் தெரிவிக்கையில், 2016 ஆம் ஆண்டிலிருந்து நிலுவைப் பணத்தொகைகள் காணப்படுவதாகவும், சில நிறுவனங்களிடமிருந்து கிடைத்த காசோலைகள் தீர்வாகியுள்ளனவா எனப் பார்ப்பதற்கு தற்போது எந்தவொரு கட்டமைப்பும் இல்லாமையால், மீண்டும் ஒருமுறை அவற்றைச் சரிபார்த்து இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தற்போது கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

திறைசேரியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு பொருத்தமான ஒரு முறைமையை வகுத்துக்கொள்ள வேண்டும் என குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

திறைசேரியுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு ஒரு முறைமையை வகுத்து ஒரு மாதத்திற்குள் (2025.12.31 ஆகும்போது) குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலர் குழுவுடன் உடன்பட்டார்.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

MT/04/14/03/01-2025 மற்றும் 2026.01.05 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் ஓர் அறிக்கை குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, முதலில் 12 நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்த நிறுவனங்கள் தொடர்பாக 2025.11.27 ஆந் திகதி காணப்பட்ட ரூ .406,830,587.00 மீதியில் ரூ . 75,833,816.00 தொகை( 18.61% சதவீதம்) அறவிடப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்களுக்குரிய நிலுவை மீதியிலிருந்து ரூ .105,999,100.00 ஐ அறவிட்டுக்கொள் முடிந்தது . குழு நடத்தப்பட்டு ஒரு மாத காலத்திற்குள் நிலுவைப் பணத்தை ரூ .181,832,915.87 இனால் குறைக்க முடிந்துள்ளது.

## 10) புகையிரதத் திணைக்களம் வசமுள்ள காணிகள்/ஆதனங்கள் அடங்கிய தரவுக் கட்டமைப்பொன்று நிறுவப்படாமை/ ஆதனங்கள் முறையாக ஆவணப்படுத்தப்படாமை.

❖ **விசாரணை நடத்தப்பட்ட திகதி - 2025.05.09**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், சொத்துக்கள் தொடர்பான தரவுகள் அடங்கிய தகவல் கட்டமைப்பொன்றை நிறுவுவது குறித்த அறிக்கையை 2024 ஆகஸ்ட் மாதம் 05 ஆந் திகதிக்குள் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும், திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் அத்துமீறிய குடியிருப்புகள் மற்றும் பதிவுகளின் எண்ணிக்கை குறித்து தயாரிக்கப்பட்ட முழுமையான அறிக்கையை 2024 செப்டம்சர் மாதம் 15 ஆந் திகதிக்குள் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறும் போக்குவரத்து மற்றும்

நெடுஞ்சாலைகள் அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவல / கணக்கீட்டு அலுவலருக்கு 2024 ஆம் ஆண்டில் நடைபெற்ற குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், 2024 செப்டம்பர் 18 ஆந் திகதி உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்வினால் குழுவின் முன்னிலையில் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் அத்துமீறிய குடியிருப்பாளர்களைப் பதிவு செய்வதற்காகப் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டு தாமாக முன்வந்து பதிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அனைத்து அத்துமீறிய குடியிருப்பாளர்களையும் இனங்காண்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும், இணைய வழி ஊடாகப் பதிவுசெய்துள்ள பயனாளர்களை முறைப்படுத்தும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2024.09.11 ஆந் திகதி வரை பதிவு செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 2,646 எனக் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

பழைய வரைபடமாக்கல் காணப்பட்ட போதிலும், புறநகர்ப் புகையிரத நிலையங்களுக்கு அருகில் மாத்திரம் புதிய டிஜிட்டல் வரைபடமாக்கல் செய்யப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை வரைபடமாக்கல் செய்வது குறித்து அதன் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான ஆதனங்கள்/ காணிகளைத் துல்லியமாக இனங்கண்டு ஆவணப்படுத்த வேண்டும் எனவும், அந்த ஆதனங்ளை வாடகை /குத்தகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் திணைக்களத்திற்குப் பெரும் வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டிய குழு, அத்துமீறி இருப்பாட்சி கொண்டுள்ள காணிகள்/ ஆதனங்களிலிருந்து அத்துமீறியவர்களை வெளியேற்றுதல் அல்லது குத்தகை அறவிட வேண்டும் என அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் குறித்து பின்வரும் விடயங்கள் உள்ளடங்கிய விரிவான அறிக்கையை 3 மாதங்களுக்குள் (2025.08.11 ஆந் திகதிக்குள்) குழுவிடம் சமர்ப்பிக்குமாறு அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் / கணக்கீட்டு அலுவலருக்கு குழு விதந்துரைத்தது.

- புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள் குறித்த தகவல்கள்
- அவற்றில் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் அவற்றின் மூலம் கிடைக்கும் வருமானம் குறித்த தகவல்கள்
- அவற்றில் அத்துமீறிய குடியிருப்புகள் கொண்ட காணிகள் மற்றும் அக்காணிகளை அத்துமீறி இருப்பாட்சி கொண்டுள்ளவர்கள் யாவர் என்பது போன்ற தகவல்கள்.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகள், அத்துமீறிய குடியிருப்புகள் கொண்ட காணிகள் மற்றும் அக்காணிகளை அத்துமீறி இருப்பாட்சி கொண்டுள்ளவர்கள் யாவர் என்பது போன்ற தகவல்கள் அடங்கிய அறிக்கை MT/04/14/03/01-2025 மற்றும் 2025.08.12 ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கு, புகையிரத ஒதுக்குப்புறங்களில் உள்ள அத்துமீறிய குடியிருப்பாளர்கள் யாவர் என்பதை புகையிரத ஒதுக்குப்புறக் காணிகள் அனைத்தையும் அளவீடு செய்த பின்னரே இனங்காண முடியும் .இதற்காகப் புகையிரதத் திணைக்களத்தில நிலஅளவீட்டு உத்தியோகத்தர்கள் போதுமான அளவில் இல்லை என்பதால், நிதி அமைச்சின் ஊடாக விவசாயம், கால்நடை, காணிகள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் நில அளவையாளர்களைக் கோரியுள்ளதுடன், 06 மாதங்களுக்குள் மனித வளங்களைப் பூர்த்திசெய்து அளவீட்டுப் பணிகளை முன்னெடுக்கும் விதம் குறித்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டர்மினல்ஸ் லிமிடெட் (CPSTL) நிறுவனத்திற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை நடத்துவதற்காக பதுளை, கொட்டகலை, குருணாகல், மாத்தறை, பேராதனை, ஹப்புத்தளை, அனுராதபுரம், சரசவி உயன மற்றும் மட்டக்களப்பு ஆகிய இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் 09 ஒதுக்குப்புறக் காணிகள் குத்தகை ஒப்பந்தங்களுக்கு எட்டப்படாமல் வழங்கப்பட்டிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டு முதல் 2024 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூ .125,830,155 நிலுவைக் குத்தகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

இதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

காணிகள் கட்டடங்களைக் குத்தகைக்கு விடுவதன் மூலம் திணைக்களத்திற்குக் கிடைக்கும் வருமானத்தை இழக்கக் கூடாது என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு விடுவது தொடர்பாகக் காணப்படும் வினைத்திறனற்ற தன்மையை ஒழிப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு புகையிரதத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு விதந்துரைக்கப்பட்டது.

**உ.விதப்புரைளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

பிரதிப் பொது முகாமையாளர் (வணிகம்) அலுவலகத்தினால் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள முனைப்பிலுள்ள குத்தகைக் கோப்புகளின் எண்ணிக்கையை இனங்காண்பதற்காக அக்கோப்புகள் கணினிமயப்படுத்தப்பட்டதுடன், அதற்கமைய சுமார் 6,500 கோப்புகள் காணப்படுவது இனங்காணப்பட்டுள்ளது. MT/04/14/03/01-2025 மற்றும் 2025.11.13 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையில், காணி குத்தகையை முறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கணினி மென்பொருளின்படி பெறப்பட்ட தரவுகளும் (இணைப்பு 28-I) அதன் விரிவான அறிக்கையும் (இணைப்பு 28-II) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- **<u>விசாரணை செய்ப்பட்ட திகதி - 2025.11.27</u>**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

முன்னைய குழுக்களினால் வழங்கப்பட்ட விதப்புரைகளின்படி, புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகள், குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் வருமானம், அத்துமீறிய குடியிருப்புகள் கொண்ட காணிகள், அத்துமீறிய இருப்பாட்சியாளர்கள் போன்ற தகவல்கள் அடங்கிய அறிக்கை வழங்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி திணைக்களத்திற்குச் சொந்தமான மொத்தக் காணி அளவு 14,129 ஏக்கர் எனவும், புகையிரதப் பாதைகள், புகையிரத நிலையங்கள், இயங்கு தளங்கள் மற்றும் அலுவலகங்களுக்காக 8,265 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது எனவும், மேலும் குத்தகைக்கு விடக்கூடிய காணி அளவு 4,395 ஏக்கர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது .அவ்வாறே கோப்புத் தரவுகளின்படி குத்தகைக்கு வழங்கப்பட்ட அளவு 1,520 ஏக்கர் எனவும், குத்தகைக்கு விட்டதன் மூலம் 2024 ஆம் ஆண்டில் 220 மில்லியன் ரூபாயும், 2025 யூன் வரை 123 மில்லியன் ரூபாயும் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளது எனவும், குத்தகைக்கு விடப்பட்ட காணிகள் தொடர்பாக பராமரிக்கப்படும் 12,562 கோப்புகளில் 6,305 காணிகளுக்குரிய கோப்புகள்

மாத்திரமே முகாமைத்துவ தகவல் கட்டமைப்பில் உள்ளீர்க்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதெனவும் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது .மேலும், அத்துமீறிய குடியிருப்புகள் கொண்ட காணிகள் மற்றும் அத்துமீறிய இருப்பாட்சியாளர்கள் குறித்த தகவல்கள் அந்த அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

பொலன்னறுவை - கதுருவெல புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள காணியில் கட்டப்பட்டுள்ள பெரிய இரண்டு மாடிக் கட்டடம் நீண்டகாலமாக எந்தப் பயனுமின்றி கைவிடப்பட்டுள்ளதாக குழுவின் கவனத்திற்குகொண்டு வரப்பட்டுள்ளதோடு, வர்த்தக அமைச்சு இக்கட்டிடத்தை உரிய மாதாந்தக் கட்டணத்தைச் செலுத்தி" சதொச "நிறுவனத்தை நடத்துவதற்கு கோரியுள்ளமை குறித்து வினவப்பட்டது.

2024.09.18 ஆந் திகதி பொலன்னறுவை - கதுருவெல புகையிரத நிலையத்திற்கு முன்னால் அமைந்திருந்த 45,000 லீட்டருக்கும் அதிகமான எண்ணெய் சேமிக்கக்கூடிய 3 எண்ணெய்த் தாங்கிகளில் தரைக்கு மேலிருந்த 2 எண்ணெய் தாங்கிகள் விலைமனுக் கோரப்பட்டு விற்பனை செய்யப்பட்ட போதிலும், அந்தத் தாங்கிகள் இன்னும் சுமார் 100 ஆண்டுகள் வரை பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடியதாக இருந்ததாகவும், அதற்கு மேலதிகமாக மற்றைய நிலத்தடித் தாங்கியையும் எடுத்துச் சென்றமையால் பிரதேசவாசிகள் பொலிஸில் முறையிட்ட போதிலும், தனது சொத்தான இதனைப் பாதுகாப்பதற்குப் புகையிரதத் திணைக்களம் மூலம் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமை குறித்து குழு வினவியது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள 6,305 குத்தகைக் காணிகளுடன் தொடர்புடைய கோப்புக்கள் குத்தகை அலுவல்களுடன் தொடர்புடைய கோப்புக்கள் எனவும், குத்தகைக்கு விண்ணப்பிக்கப்பட்ட பெருமளவிலான தற்காலிக கோப்புக்கள் (விண்ணப்பதாரர் பதிலளிக்காதவை) இதில் உள்ளடங்குவதாகவும், (ஏறத்தாழ 4000 அளவில்) செயலற்ற கோப்புக்களும் இதற்குள் உள்ளடங்குவதாகவும், வருமானம் கிடைக்கும் குத்தகைக் கோப்புத் தரவுகள் அனைத்தும் ஏற்கனவே கட்டமைப்பில் உள்ளிடப்பட்டுள்ளதாகவும், திணைக்களத்தின் முகாமைத்துவ

தகவல் கட்டமைப்பை 2026 ஜூன் மாதமளவில் தயாரித்து நிறைவுசெய்ய எதிர்பார்ப்பதாகவும், அவ்வேளையில் இப்பிரச்சினைகள் பலவற்றுக்கு பதில் காண முடியும் எனவும், அதன்மூலம் திணைக்களத்தின் காணிக் குத்தகை வழங்கல் நடவடிக்கைகளை வினைதிறன்மிக்கதாக முன்னெடுத்துச்செல்ல எதிர்பார்ப்பதாகவும் அலுவலர்கள் தெரிவித்தனர்.

பொலன்னறுவையை அண்டியதாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கையொன்றின் போது, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மாற்றுக்கட்டிடமொன்றாக இந்தக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு முன்னர் அது இரண்டு தடவைகளில் விலைமனுக் கோரப்பட்டு பாவனைக்கு வழங்கப்பட்ட போதிலும், விலைமனு உரித்தாளருக்கு அதனை பராமரித்துச்செல்ல முடியாமல் போனதாகவும், எனவே அதனை மற்றொரு அரச நிறுவனத்திற்கு வழங்குவதில் எவ்விதப் பிரச்சினையும் இல்லை எனவும் அலுவலர்கள் தெரிவித்தனர்.

புகையிரதத் திணைக்களக் காணியில் எண்ணெய்த் தாங்கிகள் நிறுவப்பட்டிருந்தாலும், அவை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ஆதனமாகும் என அலுவலர்கள் குழுவின் முன்னிலையில் தெரிவித்திருந்தனர்.

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளை அளவிடுவது குறித்து வினவியபோது, தற்போது திணைக்களத்திடம் 5 நில அளவையாளர்கள் மாத்திரமே இருப்பதால், எதிர்காலத்தில் அளவீட்டு நடவடிக்கைகளை வெளித்தரப்பினர் ஒருவரிடம் ஒப்படைப்பது குறித்து முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக்களில் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும், அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதம் குறித்த திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் அலுவலர்கள் மேலும் தெரிவித்தனர்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளைக் குத்தகைக்கு விடும் போது, குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குப் புறம்பாக காணிகள் பயன்படுத்தப்பட்டால் அது தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து புகையிரதத் திணைக்களம் உரிய கவனம் செலுத்தவில்லை என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

1. குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பயன்பாடுகளுக்கு மேலதிகமாக, குத்தகைக்கு விடப்பட்ட காணிகள் வேறு ஏதேனும் பயன்பாட்டிற்காகப் பயன்படுத்தப்படுமானால், அந்தக் காணியை மீள்மதிப்பீடு செய்து, உரிய குத்தகைத் தொகையை அறவிடுவதற்கானதொரு திட்டத்தைத் தயாரித்து, அதனை ஒரு மாதத்திற்குள் (2025.12.31 இற்குள்) குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு பி.க.அ/க.அ குழுவிற்கு உடன்பட்டார்.

2. செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தம் இல்லாத காணிகளுக்கு, செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தமொன்றை ஏற்படுத்திக்கொள்வது குறித்த திட்டமொன்றை ஒரு மாதத்திற்குள் (2025.12.31 இற்குள்) குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு பி.க.அ/க.அ குழுவிற்கு உடன்பட்டார்.

3. பொலன்னறுவை - கதுருவெல புகையிரத நிலைய வளாகத்திற்கு அருகிலுள்ள காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு, தற்போது முறையாகப் பயன்படுத்தப்படாமல் உள்ள இரு மாடிக் கட்டிடத்தை அரச நிறுவனமொன்றிற்கு குத்தகைக்கு விடுவது அல்லது வேறு சிறந்த இலாபகரமான நடவடிக்கைக்கு பயன்படுத்துவது குறித்து கலந்துரையாடி, ஒரு மாதத்திற்குள் (2025.12.31 இற்குள்) குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு பி.க.அ/க.அ குழுவிற்கு உடன்பட்டார்.

4. பொலன்னறுவை - கதுருவெல புகையிரத நிலைய வளாகத்தின் முன்னிலையில் காணப்பட்ட 45,000 லீட்டர் எண்ணெய் களஞ்சியப்படுத்த முடியுமான 3 எண்ணெய் சேமிப்புத் தாங்கிகளின் உரிமை குறித்தும், அவை தொடர்பாக எடுக்கப்பட்ட/எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஒரு மாத காலத்திற்குள் (2025.12.31 இற்குள்) குழுவிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பி.க.அ/க.அ குழுவிற்கு உடன்பட்டார்.

5. பொலன்னறுவை - கதுருவெல புகையிரத நிலைய வளாகத்தின் முன்னிலையில் காணப்பட்ட 45,000 லீட்டர் எண்ணெய் களஞ்சியப்படுத்த முடியுமான 3 எண்ணெய் சேமிப்புத் தாங்கிகளின் உரிமை குறித்தும், அவை தொடர்பாக எடுக்கப்பட்ட/எடுக்கப்பட

வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஒரு மாத காலத்திற்குள் (2025.12.31 இற்குள்) குழுவிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பி.க.அ/க.அ குழுவிற்கு உடன்பட்டார்.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

MT/04/14/03/01-2025 மற்றும் 2026.01.05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தம் இல்லாத காணிகள் தொடர்பில் செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 11) ஹச்சிசன் ரெலிகமியூனிகேஷன் லங்கா தனியார் நிறுவனமும் புகையிரத திணைக்களமும் இணைந்து புகையிரத வீதியில் கூட்டுக் கருத்திட்டமொன்றை செயற்படுத்துதல்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

ஹச்சிசன் ரெலிகமியூனிகேஷன் லங்கா தனியார் நிறுவனத்தின் முன்மொழிவின் பேரில், இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் கூட்டுத் திட்டமொன்றின் பங்காளராக தொடர்புபட்டு, கொம்பனித்தெரு புகையிரத நிலையத்திலிருந்து பேரலந்த புகையிரத நிலையம் வரையிலும் (புத்தளம் வீதி 20 கி.மீ. வரை) மற்றும் மருதானை புகையிரத நிலையத்திலிருந்து பனாகொட புகையிரத நிலையம் வரையிலும் (களனிவெலி வீதி 30 கி.மீ. வரை) இலங்கை புகையிரத திணைக்களத்தின் வீதியூடாக Fiber Cables பதிக்கும் திட்டத்தின் தொழில்நுட்ப, சுற்றுச்சூழல் மற்றும் நிதித் துறைகளை உள்ளடக்கிய முறையான சாத்தியவள ஆய்வு நடாத்தப்படாமை, முறையான சட்ட அனுமதிகள் பெறப்பட்டு எழுத்துமூல ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்வதற்கு முன்னர் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமை, இத்திட்டத்தின் கீழ் கேபிள் பதிக்கும் நடவடிக்கைக்காக அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், தற்போதுள்ள புகையிரதப் பாதையின் கேபிள் கட்டமைப்புக்கு சேதமேற்பட்டிருந்ததன் அடிப்படையில்

சமிக்ஞை கட்டமைப்புக்கும் சேதமேற்பட்டிருத்தல், அந்தச் சேதம் தொடர்பான இழப்புகள் இதுவரை மதிப்பீடுசெய்யப்பட்டு தொடர்புடைய நிறுவனத்திடமிருந்து நிதி அறிவிடப்படாமை மற்றும் கருத்திட்டத்தின் முன்னேற்றம் இதுவரை அறிக்கையிடப்படவில்லை போன்ற குறைபாடுகள் காணப்படுவதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில், கருத்திட்டத்திற்கு முறையான அனுமதி கிடைப்பதற்கு முன்பாகவே அதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதாகவும், அந்த அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்கு மேலதிகமாக மருதானை புகையிரத நிலையத்திலிருந்து பனாகொட புகையிரத நிலையம் வரையான பைபர் கேபிள்களை (Fiber Cables) பதிக்கும் கருத்திட்டம் குறித்து குழுவொன்றை நியமித்து விசாரணையொன்றை மேற்கொண்டு பொருத்தமான தீர்மானத்திற்கு வர உத்தேசித்திருப்பதாக புகையிரதப் பொது முகாமையாளர் குழுவிடம் தெரிவித்ததுடன், இதன் சட்ட நிலைமையை விளக்கிய அதன் பிரதம சமிக்ஞை பொறியாளர், கேபிள்களைப் பதிப்பதற்கு அமைச்சின் செயலாளரிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கேபிள்களை பராமரிக்கும் பராமரிப்பு சேவை ஒப்பந்தத்தை சட்டமா அதிபரிடம் ஆற்றுப்படுத்தி அனுமதி பெறுவதற்குச் சிறிது காலம் செலவானதாகவும், அந்த ஒப்பந்தமானது கேபிள் பயன்பாடு ஆரம்பிக்கப்பட்டதன் பின்னரே பொருந்தும் என்றும், அது கேபிள் பதிப்பதற்கு பொருந்தாது என்பதால் அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் கேபிள் பதிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும் கருத்துத் தெரிவித்த பிரதம சமிக்ஞை பொறியியலாளர், கேபிள் பராமரிப்பு சேவை ஒப்பந்தத்திற்கு ஏற்கனவே சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான கட்புல கேபிள் கட்டமைப்பு 50 ஆண்டுகளை விடவும் பழமையானது என்பதால், தொடர்ச்சியான துண்டிப்புக்களைத் தடுப்பதற்கு அதனை நவீனமயமாக்க வேண்டிய அவசரத் தேவை புகையிரதத் திணைக்களத்திற்கு இருந்ததாலும் ஹச்சிசன் ரெலிகமியூனிகேஷன் நிறுவனம் கட்புல கேபிள்களை வழங்கவும், புகையிரதத் திணைக்களம் தொடர்பான கேபிள்களைப் பொருத்தவும்

உடன்பட்டதால், திணைக்களத்திற்கு எவ்வித செலவுமின்றி இந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்ததாக பிரதம சமிக்ஞைப் பொறியியலாளர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

முறையான திட்டமின்றி இக்கருத்திட்டத்தைச் செயற்படுத்தியமையே அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம் என குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

ஹச்சிசன் டெலிகமியூனிகேஷன் லங்கா தனியார் நிறுவனம் மற்றும் புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையே ஏற்படுத்திக்கொள்ளப்படவுள்ள ஒப்பந்தம் குறித்து ஆய்வொன்றினை நடத்தி, குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் பி.க.அ. இற்கு குழு பரிந்துரைத்தது.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

எனது இலக்கம் 4373/12/2025 (பு.பொ.ப.) மற்றும் 2025/05/27ஆந் திகதியிட்ட கடிதத்தின் மூலம், சம்பந்தப்பட்ட ஆரம்ப விசாரணைக் கோப்பு, குற்றப்பத்திர வரைவு என்பவற்றை அரசாங்கச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரிடம் சமர்ப்பிப்பதற்காக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், ஹச்சிசன் ரெலிகமியூனிகேஷன் லங்கா தனியார் நிறுவனத்தினால் புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியில் பதிக்கப்பட்டுள்ள Fiber Optic Cablesகளில் 4 நாரிழைகளை குத்தகை அடிப்படையில் ஹச்சிசன் ரெலிகமியூனிகேஷன் லங்கா தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும்,

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் வழங்கப்பட்ட விதப்புரைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளரினால் MT/04/14/03/01-2025 ஆம் இலக்க, 2025/05/30ஆந் திகதிய கடிதத்தின் மூலம், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் (அபிவிருத்தி),

பணிப்பாளர் நாயகம் (திட்டமிடல்), சட்ட அலுவலர் ஆகியோர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக MT/04/14/03/01-2025 ஆம் இலக்க, 2025/06/04ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 12) என்ஜின்களும் வலுவேகத் தொகுதிகளும் 01 வருடம் முதல் 08 வருடங்களுக்கு அண்மிய காலமாக இரத்மலானை பிரதான இயந்திரவியல் பொறியியலாளர் அலுவலக வளவிலும் புகையிரத நிலையங்களிலும் நிறுத்தி வைக்கப்பட்டிருத்தல்.

❖ **<u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.05.09**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

திணைக்களத்திடம் ஒட்டுமொத்தமாக 267 புகையிரத என்ஜின்கள் மற்றும் வலுவேகத் தொகுதிகள் காணப்படுவதுடன், அவற்றில் 40 வருடங்களுக்கு மேற்பட்டவை 90உம், 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்டவை 69உம், 10 இற்கும் 20 இற்கும் இடைப்பட்டவை 62உம் 10 வருடங்களுக்கும் குறைந்தவை 46 உம் உள்ளடங்குவதாகவும், அவற்றில் 63 புகையிரத என்ஜின்கள் மற்றும் 40 வலுவேகத் தொகுதிகள் 01 வருடம் முதல் 08 வருடங்களுக்கு அண்மிய காலமாக இரத்மலானை பிரதான இயந்திரவியல் பொறியியலாளர் அலுவலக வளவிலும் புகையிரத நிலையங்களிலும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், மொத்தமாக 1662 பெட்டிகளில், 2024 ஆம் ஆண்டில் 1475 பயணிகள் பெட்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும், 1705 சரக்குப் பெட்டிகளில் 816 சரக்குப் பெட்டிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

தொழில்நுட்ப ஆளணிப் பற்றாக்குறை காரணமாகவே திணைக்களம் மேற்கூறப்பட்ட அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும், எதிர்வரும் செப்டம்பர் மாதமளவில் ஆளணிப் பற்றாக்குறையைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குழுவின் முன்னிலையில் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

ஆளணிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் குழு அதிகாரிகளிடம் வினவியதுடன், சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்ய வேண்டுமென்தை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இக்கணக்காய்வு விடயத்திற்காக குழுவினால் எவ்வித விதப்புரைகளும் வழங்கப்படவில்லை.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 13) புகையிரதங்களுக்கு உள்ளும் புகையிரத தரிப்பிடங்களிலும் (yard) இடம்பெறும் திருட்டுச் சம்பவங்கள்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

அனுராதபுரம் - வவுனியா வீதியில் ஓட்டத்தில் ஈடுபட்ட இரு இந்திய அதிசொகுசு புகையிரதங்கள் அனுராதபுரம் புகையிரத நிலையத்திற்குச் சொந்தமான புகையிரத தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது

அதன் பற்றரி, மோட்டார் மற்றும் வயர்கள் போன்ற இலத்திரனியல் சாதனங்கள் திருடப்பட்டுள்ளதாக கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

ஒரு புகையிரதம் தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், மற்றைய புகையிரதத்தை மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுவதோடு, பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக இந்நிலைமை தீவிரமடைந்துள்ளதாகவும், புகையிரத பாதுகாப்புச் சேவையின் ஆளணியினரை புதிதாக ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதால் எதிர்காலத்தில் இந்நிலைமையை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியுமென்றும் புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

இச்சம்பவம் இடம்பெற்று சுமார் 3 வருடங்கள் கடந்துள்ள போதிலும், இது தொடர்பான விசாரணையில் இதற்குப் பொறுப்பான நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

விசாரணை தொடர்பான அறிக்கையொன்றை கூடிய விரைவில் குழுவில் சமர்ப்பிக்குமாறு அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு குழு விதந்துரைத்தது.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- இந்த விசாரணைக்காக நியமிக்கப்பட்டிருந்த குழுவிற்கு எதிர்ப்புக்கள் கிளம்பியதன் காரணமாக புதிய விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும்,
- தற்போது குறித்த புகையிரதத்தின் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதோடு, இவ்வாரத்திற்குள் சோதனை ஓட்டத்திற்கான நடவடிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும்,

MT/04/14/03/01-2025 ஆம் இலக்க மற்றும் 2025/06/04 ஆம் திகதியிட்ட கடிதம் மூலம் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி** - 2025.11.27

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

விசாரணை தொடர்பான அறிக்கையொன்று 2025 நவம்பர் 14 ஆம் திகதி வரை குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையென்றும்,

மாளிகாவத்தை ஜோன் ஹொலண்ட் புகையிரதச்சாலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த S-13A மற்றும் S-5 ரக ஹிட்டாச்சி (Hitachi) புகையிரதப் பெட்டிகள் சிதைந்து போவதற்கு இடமளித்தமை மற்றும் அந்தப் பெட்டித்தொகுதிகளின் மின் சாதனங்கள் திருடப்பட்டமை தொடர்பான ஆரம்ப விசாரணையை நடத்தி விதப்புரைளை முன்வைப்பதற்காக 2025 மே மாதம் 30 ஆம் திகதி மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தமையும்

அக்குழுவால் மேற்படி விசாரணை தொடர்பாக 2025ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 07ஆந் திகதி அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைவாக விளக்கமளிக்கப்பட்டது எனவும்,

S-13A பெட்டிகளில் உதிரிப்பாகங்கள் திருடப்பட்டிருந்ததாக 2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆந் திகதி மேற்பார்வை முகாமையாளர் அறிக்கையிட்டிருந்தபோதும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்படவில்லை எனவும்,

இந்த புகையிரதப் பெட்டிகளைப் பராமரிக்கும் இந்திய ரயிட்ஸ் கம்பனியின் மின் பொறியியலாளர், 05 வகைகளைச் சார்ந்த 35 உருப்படிகள் காணாமல் போயுள்ளதாக அறிவித்ததன் பின்னர், அது தொடர்பாக களப் பரிசோதனையை மேற்கொண்டு 2023ஆம் ஆண்டு மே மாதம் 02ஆந் திகதி தெமட்டகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது எனவும்,

மேற்பார்வை முகாமையாளரால் 2023ஆம் ஆண்டு மே மாதம் 19ஆந் திகதி மேற்படி காணாமல் போதல்களுக்கு மேலதிகமாக, 05 வகைகளுக்குரிய 20 உருப்படிகள் காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அன்றைய தினமே பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. இவ் உருப்படியின் நட்டம் ரூ. 11,983,404 என மதிப்பிடப்பட்டது எனவும்,

காணாமல்போன உருப்படிகளுக்குரிய நட்டம் தொடர்பாக விபரமான அறிக்கையொன்று அதுவரையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை எனவும்,

சேத நட்டங்கள் தொடர்பாக 101 தொடக்கம் 110 வரையான நிதி ஒழுங்குவிதிகளுக்கமைய பிரகாரம் மற்றும் உள்ளக சுற்றுநிருபங்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்-பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

மேற்படி புகையிரதத் தரிப்பிடங்கள் எப்பொழுதும் திறந்த நிலையில் காணப்படுவதாகவும், பணிக்குழாம் பாரிய அளவானதாகக் காணப்படுவதால் பெரும்பாலும் ஒருவரை ஒருவர் இனங்கண்டுகொள்வதும் சிரமமானது எனவும், இவ்வாறான நிலையில் பாரியளவில் இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கு அதிக வாய்ப்பிருப்பதாகவும், அமைச்சுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின்போது இதன் பாதுகாப்புக்கு உள்ளக பாதுகாப்புப் பிரிவுக்கு மேலதிகமாக வெளித்தரப்பினரதும் ஒத்துழைப்பு தேவை என வலியுறுத்தப்பட்டதாகவும் அதற்கமைவாக வேலைத்திட்டமொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

புகையிரத தரிப்பிடம் விசாலமானதாக காணப்பட்டபோதும், பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டிய பிரிவுகளுக்கான பாதுகாப்பைப் பலப்படுத்தும் முறைமையொன்றை தயாரித்துக்கொள்ள வேண்டுமென குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

நாடு முழுவதுமுள்ள புகையிரத் தரிப்பிடங்களில் உள்ளக மற்றும் வெளிப்புறப் பாதுகாப்பு தொடர்பாக முறையான திட்டமொன்றை தயாரித்து ஒரு மாதத்திற்குள் (2025.12.31 ஆம் திகதியளவில்) குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு பி.க.அ. / க.அ. குழுவுடன் இணங்கினார்.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்**

MT/04/14/03/01-2025 (Vol-ii) மற்றும் 2026.02.16ஆந் திகதிய கடிதம் மூலம் அறிக்கையொன்று குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 14) புகையிரத சேவைகள் அடிக்கடி தடைப்படுதலும் திணைக்களத்தின் வினைத்திறனின்மையும்

- <u>விசாரணை செய்யப்பட்ட திகதி – 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புக்கமைய)**

புகையிரதத் திணைக்கள அலுவலர்களின் மந்தகதியான மற்றும் வினைத்திறனற்ற இயல்பு அத்திணைக்களத்தின் அழிவுக்கும் அதன் சேவைகள் தடைப்படுவதற்கும் முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

பி.க.அ. / க.அ. இனால் இது தொடர்பாக எவ்விதமான விளக்கமும் வழங்கப்படவில்லை.

### இ. குழுவின் அவதானிப்புகள்

இது, பொதுமக்கள் பெருமளவு அசௌகரியத்திற்கு உள்ளாவதற்கும், அரசாங்கத்திற்கு பாரிய நிதிசார் நட்டம் ஏற்படுவதற்கும் பாதிப்புச் செலுத்தியுள்ளதென்பதை குழு அவதானித்தது.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

மேற்படி கணக்காய்வு விடயங்களுக்காக குழுவால் விதப்புரை வழங்கப்படவில்லை.

### உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவுக்கு அறிக்கையிடுதல்

ஏற்புடையதன்று.

- விசாரணை செய்யப்பட்ட திகதி- 2025.06.05

### அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)

2017 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள், புகையிரதம் தாமதமாகி செலுத்தப்பட்ட எண்ணிக்கைகள் திட்டமிடப்பட்ட எண்ணிக்கைகளின் சதவீதமானது, 46% முதல் 64% வரையான வித்தியாசத்தில் காணப்படுவதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

### ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்

மண்மேடுகள் சரிதல், மரங்கள் முறிந்து விழுதல் மற்றும் தொழில்நுட்ப கோளாறுகள் போன்ற திணைக்களத்தினால் கட்டுப்படுத்த முடியாத நிலையிலுள்ள காரணங்களும் சில சந்தர்ப்பங்களில் புகையிரதத் தாமதத்துக்கு காரணமாகி இருப்பதாகவும், புகையிரத என்ஜின்கள் மற்றும் வீதிக் கட்டமைப்புகளுடன் தொடர்புடைய தொழில்நுட்ப காரணங்களினால் புகையிரத நிருவாகத்தினை மேற்கொள்வது மிகவும் கஸ்டமானது எனவும்,

புகையிரத சாரதிகள் உட்பட ஏனைய ஊழியர்களின் பற்றாக்குறை போன்ற காரணிகளும் தாக்கம் செலுத்துவதாகவும், புகையிரதத் திணைக்களத்தின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

புகையிரத ஓட்டங்ளை இரத்துச்செய்தல் மற்றும் தாமதமாகி ஓட்டுதல், சேவை விளைதிறனுக்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துவதனால், மேற்படி குறைபாடுகளை சரிசெய்து கொண்டு, வருங்காலத்தில் மிகச்சிறந்த புகையிரத சேவை ஒன்றை உருவாக்கும் அவசியமொன்று நிலவுகிறது என்பதே குழுவின் கருத்தாகும்.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

1. புகையிரத ஓட்டத்தின் செயலாற்றுகை (புகையிரத ஓட்டங்கள் இரத்தாகுதல் மற்றும் தாமதமாகி ஓட்டுதல்) பற்றி பின்வரும் அறிக்கைகளை வழங்குமாறு குழு புகையிரதத் திணைக்களத்தின் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு ஆலோசனை வழங்கியது.

    - நாளாந்தம் இடம்பெறும் புகையிரத இரத்துகள் மற்றும் தாமதங்கள் பற்றிய முழுமையான அறிக்கை ஒன்றை அமைச்சிற்குச் சமர்ப்பித்தல்

    - இவ்வாறான சம்பவங்களுக்கு வழிவகுத்த காரணிகள் மற்றும் மீண்டும் இவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதைத் தடுத்துக்கொள்வதற்கு எடுக்கக்கூடிய எதிர்கால நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையை அமைச்சிற்கு சமர்ப்பித்தல்.

    - புகையிரத இரத்துகள் மற்றும் தாமதங்களால் நிகழும் நாளாந்த நட்டம் பற்றி கணக்காய்வு ஒன்றை மேற்கொண்டு, ஏதுவான அறிக்கையை குழுவிற்கு சமர்ப்பித்தல்.

2. புகையிரத நிருவாகம் பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை

மேற்கொள்ளுமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.

3. கடந்த 5 வருடங்களினுள் அடைந்த நிதி முன்னேற்றம் பற்றிய விபரமான அறிக்கை ஒன்றை குழுவிற்கு கிடைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புகையிரத திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- நாளாந்தம் இடம்பெறும் புகையிரத இரத்துகள் மற்றும் தாமதங்கள் பற்றிய முழுமையான அறிக்கை ஒன்றை அமைச்சிற்கு சமர்ப்பித்து, அதன் பிரதி ஒன்று,

- தற்போது நிகழும் தாமதங்கள் மற்றும் இரத்துகளைக் குறைத்துக்கொள்வதற்காக அத்தியாவசியமான பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், எதிர்காலத்திலும் தாமதங்களையும் இரத்துகளையும் குறைத்துக்கொள்வதற்காக புகையிரத நடத்துனர், புகையிரத சாரதி மற்றும் பொறியியலாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்,

- புகையிரத அணிகளை அதிகரிப்பதற்காக தனியார் துறையினருடன் இணைந்து பணிகளை மேற்கொண்டுள்ளதாகவும்,

- நாளாந்த நட்டத்தை கணக்கிடுவதற்கு ஏதுவான கணினி மென்பொருள்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டிருப்பதோடு, அதனை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்,

- புகையிரத நிருவாகம் பற்றி ஆய்வொன்றை மேற்கொண்டு தேவையான மறுசீரமைப்புகளை மேற்கொள்வது குறித்து 2025/07/14 ஆந் திகதி புகையிரத திணைக்களத்தினால் நியமிக்கப்பட்ட குழுவானது வரைவு அறிக்கை ஒன்றைத் தயாரித்து, மேலதிக நடவடிக்கைகளுக்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு அனுப்ப உள்ளதாகவும்,

- கடந்த 5 வருடங்களுள் அடைந்த நிதி முன்னேற்றம் குறித்த அறிக்கையையும்,

MT/04/14/03/01-2025 மற்றும் 2025/11/13 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி**- 2025.11.27

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய**)

நாளாந்த நட்டத்தைக் கணக்கிடுவதற்காக Estimation of Financial Losses Due to Train Delays & Cancelation. A Methodological Approach for Sri Lanka Railways எனும் பெயரில் அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. நாளொன்றிற்கு புகையிரத தாமதம் 1000 நிமிடங்கள் என்று எடுத்துக்கொண்டால், புகையிரத தாமதத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூ. 738,560 ஆக கணக்கிடப்பட்டிருந்ததாக கணக்காளர் தலைமை அதிபதி குழுவிற்கு தெரிவித்தார்.

நாளாந்தம் நிகழும் புகையிரத இரத்துகள் மற்றும் தாமதங்களுக்கு ஏதுவான காரணிகள் மற்றும் மீண்டும் அவ்வாறான சம்பவங்கள் நிகழ்வதைத் தவிர்த்துக்கொள்வதற்கு மேற்கொள்ளக் கூடிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அறிக்கையில் உள்ளடக்கப்படவில்லை என கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

- புகையிரத் ததிணைக்களத்திற்கு புதிதாக 911 பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனுமதி கிடைத்திருந்தாலும், அது தொடர்பான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வது கடினம் என்றும், 2-3 வருடங்களுக்குள் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ள முடியுமெனவும், குறிப்பிடப்பட்ட பி.க.அ. பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் போதுமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்கள் குறைந்திருப்பதாலும், அனேகமான தொழில்நுட்பவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறி இருத்தல் போன்ற காரணங்களினால் ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வது கடினமாகி இருப்பதாகவும்,

- ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கு நீண்ட காலப் பயிற்சித் திட்டங்களுக்குப் பரிந்துரைக்க வேண்டும் என்றும், அதற்காக சுமார் 2-3 வருடங்கள் எடுக்கும் என்றும், தெமட்டகொடை மற்றும் இரத்மலானை போன்ற புகையிரத முனையங்களை அடிப்படையாகக்கொண்டு விசேட செயலணி ஒன்றை நியமித்து, எதிர்வரும் 5,10 மற்றும் 20 வருடங்கள் என்ற வகையில் திட்டங்களை ஏற்கனவே தயாரிப்பதாகவும்,

- புதிய புகையிரத என்ஜின்களைக் கொள்வனவு செய்தல், தற்போதுள்ள புகையிரத என்ஜின்களைப் பழுதுபார்த்தலைத் துரிதப்படுத்தல் போன்ற குறுகிய கால செயற்பாடுகளுக்கான ஒதுக்கீட்டு நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும்,

- 1954ஆம் ஆண்டிலிருந்து இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத என்ஜின்களின் எண்ணிக்கை 286 என்றும், தற்போது திணைக்களத்திடம் 277 காணப்படுவதாகவும், 12 புறத்தொதுக்கப்பட்டிருப்பதாகவும், அவற்றுள் 163 பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய மட்டத்தில் காணப்படுவதாகவும், சாதாரண புகையிரத ஓட்டத்திற்கு சுமார் 100 எண்ணிக்கையான புகையிரத என்ஜின்கள் தேவை என்றும், 53 எனும் பாரிய அளவான தொகுதிகள் பராமரிக்கப்படுவதாகவும், 58 சிறிய அளவான பராமரிப்பு எனும் வகையில் 111 என்ஜின்கள் ஓட்டத்தில் இல்லை என்றும்,

- 92 சாரதிகளை ஆட்சேர்ப்பு செய்ய அனுமதி கிடைத்திருப்பதாகவும், அதன் பிரகாரம் 85 பேர் டிசம்பர் 01 ஆந் திகதி நியமனத்தைப் பொறுப்பேற்க உள்ளதாகவும்,

- புகையிரத நடத்துனர் வெற்றிடங்கள் 277 இற்காக நடைபெற்ற பரீட்சையில் 57 பேர் சித்தி எய்தியிருந்தாலும், ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கு ஏதுவான கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்திருப்பது 12 பேர் மாத்திரமே என்பதை நேர்முகப் பரீசையின்போது இணங்கண்டதாகவும்,

- புகையிரத ஓட்ட தாமதங்களை உடனடியாக புகையிரத பயணிகள் அறிந்து கொள்வதற்காக பொருத்தமான கைத்தொலைபேசி செயலி ஒன்றை (Mobile Application) ஒரு தனிப்பட்ட குழுவினர் RDMNS App எனும் பெயரில் தயாரித்து இருப்பதாகவும், இருப்பினும், இது குறித்து அவர்களுடன் மேலதிகமாக கலந்துரையாட முடியாமற் போனதாகவும் பி.க.அ/ க.அ.தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

புதிய தொழில்நுட்பத்துடன் ஒப்பிடும்போது, திணைக்களத்தின் உடைமையின் கீழ் கைத்தொலைபேசி செயலி ஒன்று இல்லாமை மிகவும் பின்னடைவான நிலைமை என்றும், தனிப்பட்ட குழுவின் நிபந்தனைகளின் கீழ் இதனை மேற்கொள்ளாது, புகையிரதத் திணைக்களமே இவ்வாறான வினைத்திறனான செயலி ஒன்றை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்பதே குழுவின் கருத்தாகியது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

புகையிரத ஓட்டத் தாமதங்களை விரைவாக புகையிரத பயணிகள் அறிந்து கொள்வதற்காக பொருத்தமான கைத்தொலைபேசி செயலி ஒன்றை (Mobile Application) உருவாக்குவதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகளை எடுத்து, புகையிரத திணைக்களம் புதிய கைத்தொலைபேசி செயலி ஒன்றை உருவாக்கிக் கொள்ளுமா, ஏனைய மாற்று வழிகள் காணப்படுகின்றனவா என்பது குறித்த அறிக்கை ஒன்றை ஒரு மாதத்தினுள் (31.12.2025 ஆகும்போது) குழுவிற்கு வழங்குவதற்கு பி.க.அ/க.அ குழுவுடன் இணங்கிக்கொண்டார்.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

“நுழைவாயில்” Smart Ticketing and Seat Reservation (STSR) அமைப்பின் கீழ் தற்போது 3 செயலிகள் அபிவிருத்தி செய்யப்படுவதாகவும், புகையிரத கால அட்டவணைகளை நேரடியாகப் பார்க்கக்கூடியவாறு, தகவல்களை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு அதனை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும், MT/04/14/03/01-2025 (Vol-ii) மற்றும் 2026.02.16 ஆந் திகதிய கடிதம் மூலம் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 15) திணைக்களப் பணியாட்தொகுதி அமைப்பு

❖ விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.05.09

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய**)

2024 டிசம்பர் 31 ஆந் திகதியில் புகையிரத திணைக்களத்தில் சிரேஷ்ட நிலை, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை, ஆரம்ப நிலை, அமைய மற்றும் ஒப்பந்த எனும் பணியாட்தொகுதிக்குரிய மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 5493 என கணக்காய்வின் போது சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

புகையிரத சாரதிகள் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டாலும் அந்த புதிய ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவது 3 வருட பயிற்சி காலத்தின் பின்னர் என்றும், அக்காரணத்தினால் தற்போது புகையிரத சாரதி சேவையில் அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், சில சேவைகளில் ஊழியர்கள் குறைந்த பட்ச துப்புரவேற்பாடு வசதிகள் கூட இல்லாமல் கடும் அசௌகரியங்களுக்கு மத்தியில் சேவையாற்றுவதாகவும் பிரதம கணக்கீட்டு அலுவலர் குழுவிற்கு தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

ஆரம்ப நிலை பதவிகளில் 1474 ஊழியர் மிகையொன்று இருந்தாலும், உயர் தரங்களிலும் தொழில்நுட்ப சேவைகளிலும் ஏராளமான வெற்றிடங்கள் காணப்படுவதாகவும், விரைவாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்து பயிற்சிகளுக்கு பரிந்துரைக்க வேண்டும் என குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இந்த கணக்காய்வு விடயம் குறித்து குழுவினால் விதப்புரை வழங்கப்படவில்லை.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 16) புகையிரதப் பாதையில் ஏற்படும் சிக்கல்கள்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி- 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய**)

இந்துருவ, கின்தோட்டை,தொடன்துவ எனும் மூன்று பாலங்களும்15-16 வருடங்கள் எவ்வித சிக்கலும் இன்றி பயன்படுத்தப்பட்டாலும், 2024 ஆம் ஆண்டு அந்த மூன்று பாலங்களும் பராமரிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும், கொழும்பு கோட்டையிலிருந்து காலி புகையிரத பாதையில் M-11, M-10 எனும் என்ஜின்களையுடைய புகையிரதம் இந்துருவ புகையிரத நிலையத்திலிருந்து ஓடுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதும் தெரிய வந்தது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

பாலம் தொடர்பாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் பொறியியல் பீடத்தின் ஊடாக ஏற்கனவே ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், பிரதான பாதையில் அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், குறுக்கு பாதைகளில் நிகழும் சிக்கல்கள் காரணமாகப் புகையிரத சாரதிகள் கவனமாகப் பயணிப்பதனால், வேகக் கட்டுப்பாட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் புகையிரத திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

சாதாரணமாக பாலங்கள் நிர்மாணிக்கப்படுவது 100 வருட காலப்பகுதிக்கு ஆயினும்,மேற்படி பாலமானது 24 வருட காலப்பகுதிக்குள் துருப்பிடித்துப் போனமையானது ஏதேனும் முறைகேடுகள் காரணமாக

இடம்பெற்றிருக்கிறதா என்பது குறித்து ஆய்வு செய்ய வேண்டும் என குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இந்த கணக்காய்வு விடயம் குறித்து குழுவினால் விதப்புரை வழங்கப்படவில்லை.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 17) களனி பழைய புகையிரத பாலத்தை நிர்மாணிப்பதற்கும் மாற்றம் செய்வதற்குமான கருத்திட்டம்

- <u>விசாரணை செய்யப்பட்ட திகதி- 2025.05.09</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய**)

ஆஸ்திரியாவின் 16,600,000 யூரோ உதவியால் களனி பழைய புகையிரதப் பாலத்தை நிர்மாணிக்கும் மற்றும் அனைத்துப் பணிகளையும் நிறைவு செய்து )Turnkey) மீளமைக்கும் கருத்திட்டத்தின் பிரகாரம், பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்வின் பிரகாரம் இப்பாலத்தை 2022 ஆம் ஆண்டு வரை பாவனைக்கு எடுத்துக்கொள்ள முடியும் என அறிக்கையிடப்பட்டிருந்தது. பாலம் எதிர்வரும் ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடங்களில் கட்டாயமாக அகற்றப்பட வேண்டியிருந்தாலும் அதற்காகப் புகையிரதத் திணைக்களம் அல்லது போக்குவரத்து அமைச்சு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முன்னாயத்தம் கூட இல்லாததோடு, சாத்தியவள ஆய்வொன்றைக் கூட மேற்கொண்டிருக்கவில்லை எனக் கணக்காய்வின்போது தெரிய வந்தது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

இந்த மாற்றத்திற்காக அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டிருந்ததோடு, எதிர்வரும் 3 மாதங்களுக்குள் CECB நிறுவனத்தினால் வழங்கப்படும் திட்டத்துடன் ஏனைய ஆவணங்களைத் தயாரித்து கேள்விப் பத்திரங்களைக் கோருவதற்கு திட்டமிடப்பட்டிருந்தமை புகையிரத திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் உட்பட திணைக்களத் தலைவர்களது கருத்தாகியது.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

வெகு விரைவில் இதன் பணிகளை ஆரம்பித்து, ஆபத்துக்களைக் குறைத்துக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக குழுவில் அவதானிக்கப்பட்டது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இந்த கணக்காய்வு விடயம் குறித்து குழுவினால் விதப்புரை வழங்கப்படவில்லை.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

களனி பழைய புகையிரதப் பாலத்தை மாற்றுவதற்கான கருத்திட்டத்தின் பிரகாரம்,பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியலாளர்கள் குழு ஒன்றினால் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள அறிக்கையின் பிரகாரம் இப்பாலத்தை 2022 ஆம் ஆண்டு வரை பயன்படுத்த முடியுமென அறிக்கையிடப்பட்டிருந்தாலும், அதன் பிரகாரம் இப்பாலம் எதிர்வரும் ஒரு வருடத்தில் அல்லது இரண்டு வருடத்தில் கட்டாயமாக அகற்ற வேண்டியிருந்தாலும் அதற்காக புகையிரத திணைக்களம் அல்லது போக்குவரத்து அமைச்சு மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் குறித்து முன்னாயத்தம் கூட இல்லாததோடு, சாத்தியவள ஆய்வொன்று கூட மேற்கொள்ளப்படவில்லை என கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கங்கள்**

இதற்காக உள்நாட்டு நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்தார்கள். Central Engineering Consultancy Bureau (CECB) நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே விலைமானுக்கோரலொன்று பெறப்பட்டிருப்பதாகவும், திட்டமிடல்கள், கேள்விப்பத்திர ஆவணங்கள் மற்றும் பொறியியலாளரின் மதிப்பீடும் தற்போது கிடைத்திருப்பதாகவும் அதற்கு ஏதுவான அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்கனவே தயாரித்து நிறைவு செய்துள்ளதாகவும் அதனை எதிர்வரும் வாரத்தில் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முடியுமெனவும் உத்தியோகத்தர்கள் தெரிவித்தார்கள்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

2023 மற்றும் 2024 ஆகிய இரண்டு வருடங்களுக்கும் திறைசேரியினால் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், புகைதயிரதத் திணைக்களம் இதற்காக திட்டம் ஒன்றைக்கூடத் தயாரித்து இருக்காமை புகையிரத திணைக்களத்தின் வினைத்திறனற்ற நிலை என குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

இன்றைய தினம் இந்த கணக்காய்வு விடயம் குறித்து குழுவினால் எதுவித விதப்புரையும் வழங்கப்படவில்லை

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 18) இரத்மலானை பிரதான இயந்திரப் பொறியியலாளர் அலுவலக வளாகத்தில் குறைவாகப் பயன்படுத்தும்

# இயந்திர உபகரணங்கள் மற்றும் கழிவிரும்புப் பொருள்கள் குவிந்திருத்தல்.

- ❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி- 2025.06.05</u>

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய**)

I. யப்பான் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட என்ஜின் பழுதுபார்த்தல் மற்றும் ஆய்விற்காக பயன்படுத்தப்படும் Testing Room
II. ருமேனியா உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட பூச்சுக்களை அகற்றுவதற்காக பயன்படுத்தப்படும் Shot Blasting Room
III. செங்குத்தாக பொருத்தப்பட்டுள்ள Press Machine

ஆகிய புகையிரத நிலையத்திற்கு சொந்தமான இயந்திரங்கள் மற்றும் இயந்திர கூடங்கள் குறை பயன்பாடுடையதாக அவதானிக்கப்படுவதாக கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.அ) விளக்கமளிப்புகள்**

வருடாந்த தேவைகளை கருத்திற்கொண்டு, திணைக்களத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டுள்ளதாக உத்தியோகத்தர்கள் தெரிவித்தார்கள்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

அகற்றவேண்டியுள்ள மிகப் பழைமையான இயந்திர சாதனங்கள் மற்றும் கழித்தொதுக்கப்பட்ட பொருளகள் புகையிரத வேலைத்தளத்தில் குவிக்கப்பட்டுள்ளதால் ஊழியர்களின் நாளாந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு வசதிகள் போதுமானதாக இல்லாமை, பணியாற்றுவதற்குப் பொருத்தமான வேலைச்சூழல் காணப்படாமை, பெறுகைச் செயன்முறையில் குறைபாடுகள் காணப்படுகின்றமை, தேவையற்ற வகையில் மேலதிகமான இருப்புகள் பராமரிக்கப்படுவதுடன் குறிப்பிட்ட சில இயந்திரங்களின் உத்தரவாதக் காலப்பகுதி (warranty period) நிறைவடைந்ததன் பின்னர் பயன்பாட்டுக்கு எடுத்துள்ளமையால் கொடுப்பனவுகளைச் செலுத்தாது கோளாறுகள்/ குறைபாடுகளைத் திருத்துவதற்கான சந்தர்ப்பங்கள் இல்லாமல் போயுள்ளமை போன்ற விடயங்களை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

குறித்த கணக்காய்வு விடயத்திற்கு குழுவால் விதப்புரை சமர்ப்பிக்கப்படவில்லை.

**உ. விதப்புரைரை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்.**

ஏற்புடைத்தன்று.

## 19) M–11 புகையிரத என்ஜின்களின் கொள்வனவு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள்

❖ விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் விதப்புரைகளுக்கமைய)**

முறையான திட்டமிடல் இன்றி குறித்த M–11 என்ஜின்களைக் கொள்வனவுசெய்துள்ளமை கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

i. 2019 ஆம் ஆண்டில் M–11 வகையைச் சேர்ந்த 10 என்ஜின்கள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டதாகவும் 2020 ஆம் ஆண்டு நிறைவடைகையில் அனைத்து என்ஜின்களும் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

ii. மேற்படி என்ஜின் ஒன்றின் விலை - 4.2 மில்லியன் ஐ.அ.டொ.

iii. குறித்த என்ஜின்களை குறிப்பிட்ட காலம் பயன்படுத்தியதன் பின்னர் மேற்படி 10 என்ஜின்களும் இயங்காத நிலையில் காணப்பட்டதாகவும் இன்றளவில் அவற்றில் 8 என்ஜின்களை இயங்கும்நிலைக்கு கொண்டுவந்துள்ளதோடு, மிகுதி இரண்டு என்ஜின்களையும் இயங்கும் நிலைக்கு கொண்டுவருவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

iv. அதன் பராமரிப்பு வழிகாட்டல் புத்தகத்தில் (Maintenance Manual) குறிப்பிட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக Starter Motor 40 இற்கு கோரிக்கை விடுத்ததாகவும், Starter Motor இனைப் பயன்படுத்தாது விட்டால் என்ஜினுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் மற்றும் அதன் காரணமாக குறித்த கம்பனி அதன் என்ஜின்களுக்கான பொறுப்பிலிருந்து விலகிக்கொள்வதையும் கவனத்திற்கொண்டு மேற்படி கோரிக்கையை மேற்கொண்டதாகவும்,

v. வழிகாட்டல் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள வழிமுறைமைக்கு அமைவாக பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் M – 11 என்ஜின்களை சுமார் 18 வருடங்களுக்கு பயன்படுத்த முடிவதுடன் அவ்வாறான பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது புதிய என்ஜின்களைக் கொள்வனவு செய்வதை விடவும் இலாபகரமானது

என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இ.குழுவின் அவதானிப்புகள்

புகையிரத உதிரிப் பாகங்கள் / இயந்திர சாதனங்கள் தொடர்பான தரவுகளை உள்ளடக்கிய இற்றைப்படுத்திய தகவல் முறைமையொன்று காணப்படாமையால் புகையிரத திணைக்களத்தின் களஞ்சியங்களில் காணப்படுகின்ற பொருட்கள் தொடர்பாக முறையாக அறிக்கையிடுவதில்லை என்றும் உரிய தீர்மானங்களை எடுப்பதற்கு இது பெரும் தடையாக காணப்படுதை குழுவால் அவதானிக்கப்பட்டது.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

**i.** M - என்ஜின்கள் 11 இன் கொள்வனவுச் செயன்முறை தொடர்பாக புலனாய்வொன்றை மேற்கொண்டு குழுவிற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.

**ii.** குறித்த என்ஜின்களைக் கொள்வனவு செய்வதற்காக ஏற்பட்ட செலவு மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக இன்றளவில் மேற்கொண்டுள்ள செலவு தெடர்பாக புலனாய்வு செய்து குழுவிற்கு அறிக்கையிடுமாறு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.

### உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்

i. புகையிரத திணைக்களத்தின் 5 வருட வேலைத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள தேவைப்பாடாகிய 2300 – 3200 வரையிலான குதிரைவலு கொண்ட 10 மின்சார - டீசல் என்ஜின்கள் கொள்வனவை இந்திய கடன் உதவித் திட்டத்தின் (Indian credit line) கீழ் மேற்கொள்வதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ii. போட்டிகரமான முறைமையில் விலைமனுக் கோருவதற்கான ஆவணங்களை தயாரித்துள்ளதாகவும், இந்திய உதவி கடன் திட்டத்தின் கீழ் விலைகளை வ/ப றைட் கம்பனி மாத்திரமே சமர்ப்பிக்கும் என்பதை இந்திய அரசாங்கம் அறிவித்ததைத் தொடர்ந்து மேற்படி நிறுவனத்தினால் சமரப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் மற்றும் விவரக்குறிப்புகளை புகையிரத திணைக்களத்தின் தேவைக்கு ஏற்றவாறு தயாரிப்பதற்கான தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொண்டதன் பின்னர், கருத்திட்டக் குழுவின் விதப்புரைகள் மற்றும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுவின் தீர்மானத்தை அமைச்சரவை அங்கீகரித்ததன் பின்னர் 2300 – 3200 வரையான குதிரைவலு கொண்ட டீசல் – மின்சார என்ஜின் (M 11) 10 இனைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

iii. என்ஜின்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவும் பராமரிப்புக்காக இன்றளவில் ஏற்பட்டுள்ள செலவும்,

MT/04/14/03/01-2025 மற்றும் 2025.11.13 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில், இணைப்பு 9 இன் கீழ் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## 20) புகையிரத ஆசனங்களை ஒதுக்குவது தொடர்பாக மொபிரெல் நிறுவனத்துடன் செய்துகொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கை

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.06.05

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

M ஆசனங்களை ஒதுக்குதல் வழிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு வ/ப மொபிரெல் (தனியார்) கம்பனி மற்றும் இலங்கை புகையிரத திணைக்களத்திற்கும் இடையில் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை 2023 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி நிறைவடைந்துள்ள போதிலும் குறித்த உடன்படிக்கையை இற்றைப்படுவதற்கு அல்லது புதிய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில் M ஆசனங்களை ஒதுக்குவது தொடர்பான கட்டணங்கள் மொபிடெல் நிறுவனத்தின் கணக்கில் வரவு வைக்கப்படுவதாக கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.)/ கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

புதிய உடன்படிக்கைக்கு சட்டத்துறை தலைமையதிபதியின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு உடன்படிக்கை செய்வதற்கு ரூ.18 மில்லியன் வைப்புத் தொகை தேவைப்படுவதாக அறிவித்துள்ளதாகவும், அவர்களின் இணக்கப்பாடு கிடைத்தவுடன் உடன்படிக்கை செய்வதற்கு தயாராக இருப்பதாகவும், மேற்படி நிறுவனத்தில் இருந்து புகையிரத திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டியுள்ள அனைத்து தொகையும் கிடைத்துள்ளதாகவும் கணக்கீட்டு அலுவலரால் தெரிவிக்கப்பட்டது.

இ. **குழுவின் அவதானிப்புகள்**

புகையிரத திணைக்களம் மிக விரைவாக இது தொடர்பான பிரச்சினையை தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பது குழுவால் அவதானிக்கப்பட்டது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

குறித்த கணக்காய்வு விடயம் தொடர்பாக குழு விப்புரைகளைச் சமர்ப்பிக்கவில்லை.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றம் குறித்து குழுவிற்கு அறிக்கையிடுதல்.**

ஏற்புடையன்று.

## 21) புகையிரதம் மூலம் சுண்ணாம்புக்கல் கொண்டு செல்வதற்காக புகையிரத என்ஜின்களையும் சாரதிகளையும் வழங்கியதற்காக அறவிட வேண்டியுள்ள பணத்தொகையை அறவிடுதல்.

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u> - 2025.06.05

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

புகையிரதம் மூலம் சுண்ணாம்புக் கல் கொண்டுசெல்வதற்கு சியேம் சிட்டி சிமென்ட் (லங்கா) கம்பனியிடம் இருந்து 2024 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியில் அறவிடவேண்டியுள்ள நிலுவை வருமானம் ரூ. 2,187,326 என்பது கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின்(க.அ.) விளக்கங்கள்**

புத்தளம், அறுவக்காடு பிரதேசத்திலுள்ள தனியார் சீமெந்து தொழிற்சாலைக்கு சுண்ணாம்புக் கற்களை ஏற்றிச் செல்வதற்கு திணைக்களத்தின் புகையிரத என்ஜின்கள் மற்றும் சாரதிகளை வாடகை அடிப்படையில் ஈடுபடுத்தியதாகவும், அது தொடர்பான கொடுப்பனவு பற்றுச்சீட்டுகளை சமர்ப்பிக்கையில் புகையிரத என்ஜின்கள் பயன்படுத்தாத காலப்பகுதியும் உள்ளடக்கப்பட்டிருந்ததால், குறித்த கம்பனி குறிப்பிட்ட தொகையினைச் செலுத்துவதை நிராகரித்துள்ளதுடன் பின்னர் மேலதிகமாக அறவிடப்பட்ட தொகை தொடர்பாக திருத்தப்பட்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின்னர் தற்போது குறிப்பிட்ட தொகையினைச் செலுத்தியுள்ளதாகவும் குழுவில் புகையிரத திணைக்கள அலுவலர்களினால் தெரிவக்கப்பட்டது.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

கம்பனிக்கு வழங்கும் புகையிரத என்ஜின்களை மீள ஒப்படைக்கையில் பதிவுகள் மற்றும் முறையான மேற்பார்வை நடவடிக்கைகள் இடம்பெறாமையே இதற்கான காரணம் என்பது குழுவின் அபிப்பிராயமாக இருந்தது. அதேபோன்று உரிய காலப்பகுதியை பதிவிடும் முறைமையொன்றைத் தயாரித்து சரியான காலப்பகுதியை உள்ளடக்கிய பற்றுச்சீட்டுக்களை குறித்த கம்பனிக்கு அனுப்புவதன் தேவைப்பாடு தொடர்பாகவும் வலியுறுத்தப்பட்டது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

குறித்த கணக்காய்வு விடயத்தற்கு குழுவால் விதப்புரை வழங்கப்படவில்லை.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

❖ விசாரணை செய்யப்பட்ட திகதி 2025.11.27

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கு அமைவாக)**

அறுவக்காடு புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதம் மூலமாக சுண்ணாம்புக் கற்களை ஏற்றிச் செல்வதற்காக சியேம் சிட்டி சிமென்ட் (லங்கா) கம்பனியிலிருந்து அறவீடு செய்யவேண்டியுள்ள நிலுவை வருமானம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் தொடர்பாக கணக்காய்வின் போது வினவப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவரன் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

சீமெந்துக் கூட்டுத்தாபனத்தை தனியார்மயப்படுத்தியதைத் தொடர்ந்து அதன் அனைத்துச் சொத்துகளும் தனியார் நிறுவனமொன்றுக்கு உரித்தானதுடன், அமைச்சரவைத் தீர்மானத்திற்கு இணங்க புகையிரத திணைக்களமும் தனியார் சீமெந்துக் கம்பனியும் (சியெம் சிட்டி) உடன்படிக்கையின் பேரில் ஏற்றிச்செல்லும் ஒரு தொன் சுண்ணாம்புக் கல்லுக்கு கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டிக்கு நேரொத்ததாக விலை நிர்ணயம் செய்து குறித்த பணத்தை புகையிரத திணைக்களம் அறவிடுவதாகவும், புகையிரத என்ஜின்களை குறித்த நிறுவனத்திற்கு வாடகை அடிப்படையில் வழங்கி அதன் மூலமாகவும் திணைக்களம் பணம் ஈட்டுவதாகவும், இன்றளவில் தவறாது குறித்த நிறுவனம் திணைக்களத்திற்கு பணம் செலுத்தியுள்ளதாகவும் புகையிரத திணைக்களத்தின் அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

புகையிரத என்ஜின்களையும் சாரதிகளையும் குத்தகை அடிப்படையில் ஈடுபடுத்துதல் மற்றும் அதிலிருந்து வருமானங்களை பெற்றுக்கொள்ளுதல்

என்பன தெளிவானதொரு திட்டத்தின் அடிப்படையில் இடம்பெறாமை குழுவால் அவதானிக்கப்பட்டது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான புகையிரதங்கள்/ என்ஜின்களை குத்தகைக்கு வழங்குதல், அதன் நடவடிக்கைகள் தெடர்பான அறவீடுகள் மற்றும் வருமானம், தண்டவாளங்களை அமைத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பொதுவான நடவடிக்கைகள் இடம்பெறும் முறைமை மற்றும் நிருவாகம் தொடர்பான அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் (17.12.2025 ஆம் திகதியில்) குழுவிற்கு வழங்குவதற்கு பி.க.அ./க.அ. குழுவுடன் இணக்கம் காணப்பட்டது.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

MT/04/14/03/01-2025 மற்றும் 2025.12.31 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிக்கையொன்று குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

## 22) தருவித்தல் கட்டளைக்கமைய பொருள்கள் உரிய தரத்திலும் கோரப்பட்ட எண்ணிக்கையிலும் கிடைத்துள்ளனவா என்பதை உறுதிப்படுத்தாமல் வழங்குனர்களுக்கு பணம் செலுத்துதல் மற்றும் குறைவாக கிடைக்கப் பெற்றுள்ள பொருள்களுக்காக அறவிட்டுக்கொள்ள வேண்டிய தொகையை அறவிடாமை

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி -</u> 2025.06.05

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

பொருட்கள் உரிய தரத்திற்கு அமைவாகவும் சரியான எண்ணிக்கையிலும் கிடைக்கப் பெற்றதாக கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தும் அலுவலரால் உறுதிப்படுத்தியதன் பின்னர் களஞ்சியசாலை வழங்கலுக்காக கொடுப்பனவுக்ள செலுத்தப்பட வேண்டியுள்ளதாக காணப்பட்ட போதிலும், அவ்வாறு எந்தவிதமான உறுதிப்படுத்தலும் இன்றி வழங்கப்படாத பொருட்களுக்காக ரூ. 95,763,117 இனை வழங்குனர்களுக்குச் செலுத்தியுள்ளதாகவும், 1980 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூ. 84,079,198 ஆன தொகையும், 2023 ஆம் ஆண்டிற்காக ரூ. 2,184,27 தொகையும் 2024 ஆம் ஆண்டிற்காக 26,138 தொகையுமாக வழங்கப்படாத பொருட்களுக்காக செலுத்தப்பட்டுள்ள

ரூ.86,289,615 இனை அறவீடு செய்யப்படாமை தொடர்பாகவும் கணக்காய்வின்போது சுட்டிக் காட்டப்பட்டது.

**ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்**

சம்பந்தப்பட்ட வழங்குனர்களுடன் கலந்துரையாடி ஏற்கெனவே மேற்கொண்ட இவ்வாறான கொள்வனவுகளுக்கான பணத்தை அறவீடு செய்தல் அல்லது பண்டப் பரிமாற்றங்கள் மூலம் செலுத்தித் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. அதேபோன்று, அண்மைக்கால வழங்குனர்களை தொடர்புகொள்ள முடிந்துள்ள போதிலும், 1980கள் போன்ற கடந்தகாலத்தில் மேற்கொண்ட கொள்வனவுகள் தொடர்பாக கவனம் செலுத்துகையில் குறிப்பிட்ட சில வழங்குனர் நிறுவனங்கள் தற்போது இல்லாமை, குறித்த செயற்பாடுகளில் காணப்படுகின்ற அசௌகரியம் தொடர்பாகவும் அலுவலர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

முறையான பெறுகைச் செயன்முறை காணப்படாமை இதற்கு காரணம் என்பதை குழு அவதானித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

குறித்த கணக்காய்வு விடயத்திற்குகு குழுவால் விதப்புரை வழங்கப்படவில்லை.

**உ.விதப்புரைளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

ஏற்புடையதன்று.

## 27 புகையிரதம் மூலம் பண்டங்களைக் கொண்டு செல்லுதல்

❖ <u>விசாரணை செய்யப்பட்ட திகதி</u>- 2025.06.05

### அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புக்களுக்கமைய)

புகையிரதம் மூலமாக பண்டங்களை கொண்டு செல்வதற்காக 2021 ஆம் ஆண்டின் இறுதியில் 47 நிறுவனங்களிடம் இருந்து ரூ. 140,784,351 தொகையும், 2020 ஆம் ஆண்டில் புகையிரத ஆணைச்சீட்டு நிலுவை வருமானம் ரூ. 848,334,880 தொகையும் வேறு நிலுவை வருமானங்கள் மூலமாக ரூ. 556,205,725 தொகையும் கடை அறைகள் மற்றும் 03 பண்ட களஞ்சியசாலைகளின் நிலுவை வாடகை ரூ. 36,790,032 ஆன தொகையுடன் ரூ. 1,582,114,988 ஆன நிலுவை வருமானங்கள் அறவீடு செய்யப்படவில்லை என்றும், புகையிரதம் மூலமாக பொருட்களை கொண்டு சென்றமைக்காக 2024 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியாகும் போது 31 நிறுவனங்களிடம் இருந்து கிடைக்க வேண்டியுள்ள ரூ. 169,769,006 தொகை நிலுவையாக காணப்படுவதுடன் இவற்றில் 20 நிறுவனங்களிடம் இருந்து கிடைக்க வேண்டியுள்ள ரூ. 23,457,706 தொகை 7 வருடம் தொடக்கம் 44 வருடங்கள் பழைமையான மீதிகள் என கணக்காய்வின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

### ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலர் (பி.க.அ.) / கணக்கீட்டு அலுவலரின் (க.அ.) விளக்கங்கள்

இற்றைக்கு 160 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டப் போக்குவரத்தை நோக்கமாகக் கொண்டு புகையிரத திணைக்களத்தை ஆரம்பிக்கப்பட்டபோதும், 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் மொத்த பண்டப் போக்குவரத்தில், புகையிரதம் மூலம் 0.6% மாத்திரமே இடம்பெறுகின்றமை குழுவில் வெளிப்படுத்தப்பட்டது. கடந்த காலப்பகுதியில் பொருட்களை கொண்டு செல்வதில் புகையிரத திணைக்களம் ஏகபோக உரிமைமையினைக் கொண்டிருந்த போதிலும், தற்போது காணப்படுகின்ற வீதிக் கட்டமைப்புக்களின் முன்னேற்றம், பொருட்களை கொண்டு செல்லக்கூடிய லொறிகள் போன்ற வினைத்திறனான போக்குவரத்து சாதனங்கள் காணப்படுகின்றமை, புகையிரதப் பாதைகளை அமைக்கும் பணிகளை திணைக்களம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் ஒரு தடவை பண்டப் போக்குவரத்தை மேற்கொள்ள அதிக நிர்ணயிக்க வேண்டியுள்ளதால் புகையிரதம் மூலம் மேற்கொள்ளும் பண்டப் போக்குவரத்து குறைவடைந்துள்ளதாகவும் புகையிரத திணைக்களத்தின் அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று “பிரீமா” கம்பனியை போன்று “*இன்சி சீமெந்து*” கம்பனியுடன் ஏற்கனவே உடன்படிக்கைகளை மேற்கொண்டு செயற்படுவதுடன் கொண்டு செல்லும் எரிபொருளின் அளவை 40% ஆக அதிகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், காங்கேசன் துறை வரையில் எரிபொருளை கொண்டு செல்வதற்கும், தபுத்தேகமையில் இருந்து

கொழும்பிற்கு விவசாயப் பொருட்களை கொண்டு செல்வதற்கும் அதே புகையிரதத்தில் கொழும்பில் இருந்து தபுத்தேகம வரையில் பொதிகளை கொண்டு செல்வதற்குமான கருத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே உடன்படிக்கை தயார் செய்யப்பட்டுள்ளதாக அலுவலர்களால் தெளிவுபடுத்தப்பட்டது.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

புகையிரதம் மூலமாக மேற்கொள்கின்ற பண்டப் போக்குவரத்தை வினைத்திறனுடையதாக மாற்ற வேண்டும்.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

பண்டப் போக்குவரத்து தொடர்பான திட்டம் (Master Plan) ஒன்றைத் தயாரித்து குழுவிற்கு ஆற்றுப்படுத்துமாறு திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரை வழங்கப்பட்டது.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- பண்டப் போக்குவரத்து திட்டத்திற்கான (Master Plan) அடிப்படை அறிக்கையினையும்,
- தற்போது வெயாங்கொட பல்முனை பண்டப் போக்குவரத்து நிலையம் மற்றும் தபுத்தேகமையில் இருந்து கொழும்புக்கு மரக்கறிகளை கொண்டு செல்வது தொடர்பான சாத்தியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதையும்,
- தற்போது நிலவுகின்ற என்ஜின் பற்றாக்குறை காரணமாக புகையிரதம் மூலமான பண்டப் போக்குவரத்திற்கு கிடைக்கின்ற கோரிக்கை தொடர்பாக அவர்களின் நம்பகத் தன்மையை தக்கவைத்துக்கொள்ளும் வகையில் போக்குவரத்து நடவடிக்கைகளை பொறுப்பேற்பது அசௌகரியமாக இருப்பதையும் தெரிவித்து,

MT/04/14/03/01-2025 மற்றும் 2025.11.13 ஆம் திகதிய கடிதம் மூலம் சமர்ப்பித்துள்ள அறிக்கை, இணைப்பு 19 இன் கீழ் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

## 24) புகையிரத விபத்துகள்

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05**
**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

புகையிரதப் பாதை கட்டமைப்புடன் இணைந்த பிரதான மற்றும் பிரதானமல்லாத 1362 புகையிரதக் கடவைகள் காணப்படுவதுடன் அவற்றுள் 185 தனிப்பட்ட புகையிரதக் கடவைகளாகக் காணப்படுவதுடன், 1177 புகையிரத் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய புகையிரதக் கடவைகளாகக் காணப்படுகின்றன. இந்த 1177 புகையிரதக் கடவைகளில் புகையிரத கேட்கள் செயற்படுத்தப்படுகின்ற புகையிரதக் கடவைகள் 300ம், புகையிரத வீதி சமிக்ஞைகள் செயற்படுத்தப்படுகின்ற புகையிரதக் கடவைகள் 438ம், சமூக பொலிஸ் குழு உறுப்பினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள புகையிரதக் கடவைகள் 439ம் உள்ளடங்குகின்றன. மேற்படி 439 புகையிரதக் கடவைகளில் 200இல் கைகளால் செயற்படுத்தப்படுகின்ற கேட்கள் பொருத்தப்பட்டிருப்பதுடன் எஞ்சிய 239 கடவைகளும் பாதுகாப்பற்ற நிலைமையில் காணப்பட்டாலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. குறித்த பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் காணப்படுவதும், புகையிரக் கடவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு செயன்முறைகள் உரிய முறையில் செயற்படுத்தப்படாமை காரணமாகவும் 2020ஆம் ஆண்டு தொடக்கம் 2024ஆம் ஆண்டுவரையான 5 வருடக் காலப்பகுதியில் 385 புகையிரதக் கடவை விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதுடன் இதன் காரணமாக 37உயிரிழப்புக்கள் மற்றும் 105 காயமான சம்பங்களும் பதிவாகியுள்ளதாகக் கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**ஆ. பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.உ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.உ) விளக்கங்கள்**

புகையிரதக் கடவைகளை 75 ஆம் ஆண்டு இறுதியாகும்போது 2025 பாதுகாப்பு நிலைமைக்கு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் புகையிரதக் கடவைத் தடைகள், மணி மற்றும் ஒளி சமிஞ்ஞை முறைமையை நிறுவுதல் மற்றும் மேற்படி புகையிரத சமிக்ஞை முறைமை மூலம் புகையிரதக் கடவைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் புகையிரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரித்துள்ளனர்.

**இ. குழுவின் அவதானிப்புகள்**

தற்கொலை செய்து கொள்ளல் மற்றும் புகையிரதப் பாதையில் பயணிக்கும் போது ஏற்படுகின்ற விபத்துக்கள் காரணமாக ஆண்டொன்றுக்கு சுமார் 300 மரணங்கள் சம்பவிப்பதாகவும், கவனயீனமாக புகையிரதத்தை ஓட்டுவதால் சம்பவித்துள்ள விபத்துக்களுக்கு பொறுப்புக் கூறவேண்டிய நபர்களுக்கு மேலதிக கட்டணங்கள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

**ஈ. குழுவின் பரிந்துரைகள்**

1. பாதுகாப்பற்ற புகையிரத கேட்டுகள் அனைத்தையும் பாதுகாப்பான நிலைமைக்கு மாற்றுவதன் அவசியத்தை வலியுறுத்திய குழு அடையாளம் காணப்பட்ட பாதுகாப்பற்ற புகையிரத கேட்டுகள் தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணமொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு புகையிரதத் திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரை செய்தது.

2. தொழிநுட்ப அறிவு படைத்த மூன்றாம் நபர் மூலம் விசாரணையை முன்னெடுத்து புகையிரத விபத்துக்களை குறைத்துக்கொள்வதற்கான பரிந்துரைகளுடன் கூடிய அறிக்கையொன்றினை குழுவிற்கு முன்வைப்பதற்கு திணைக்களத்தின் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு பரிந்துரை செய்தது.

**உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடுதல்**

- பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை தற்போது 429 ஆக் குறைவடைந்துள்ளதாகவும்,
- மஹவ அநுராதபுரம் /சமிக்ஞை கருத்திட்டத்தின் கீழ்46 புதிய கட்டமைப்புக்களை தாபிப்பதற்கான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும்,
- திணைக்களத்தின் கருத்திட்டத்தின் மூலம் புதிய கட்டமைப்புக்கள் 15 நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும்,
- புகையிரதக் கடவைகளுக்கான முன்னுரிமையை அடையாளம் காணுவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் அத்தியாவசியமான இடங்கள் இனங்காணப்பட்டதுடன் அவற்றுள் 134 இடங்களை வருடத்திற்குள் தாபிப்பதற்கு நடவடிக்கை 2027/2026 மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,
- வீதிப் பாதுகாப்புத் தொடர்பான தேசிய சபையின் தலைவரை தொடர்புபடுத்திக் கொண்டு 2025.07.28ஆம் திகதி புகையிரதப் பொது முகாமையாளருடன் பேச்சுவார்த்தையொன்றினை நடாத்தியுள்ளதுடன்

அங்கு குறித்த திட்டத்தை தயாரித்தல் தொடர்பான ஒழுங்குமுறைகளை குறித்த சபைக்கு வழங்கியுள்ளதாகவும், இது தொடர்பாக திணைக்களத்தினை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் வாய்மொழி மூலம் அறியத் தந்துள்ளதாகவும்,

MT/04/14/03/01-2025 மற்றும் 2025.11.13ஆம் திகதியிடப்பட்ட கடித்தின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், இணைப்பு 20 மற்றும் 21ன் கீழ் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 25) புகையிரத் திணைக்களத்திற்கான ஆட்சேர்ப்புகளும் பதவி உயர்வுகளும்

- **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05**

### அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)

சிரேஷ்ட நிலையில் 210 அனுமதிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கையில் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 128 ஆகையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 82 அதாவது நூற்றுக்கு 39 எனவும், மூன்றாம் நிலையில் 450 அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 67 ஆகாக் காணப்படுவதனால், வெற்றிடங்களின் எண்ணிக்கை 383 அதாவது நூற்றுக்கு 85 எனும் உயர் மட்டத்தில் காணப்படுவதாகவும் இரண்டாம் நிலையில் 11,339 ஆகிய அனுமதிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 5928 ஆகையால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 5411 அதாவது நூற்றுக்கு 47 எனவும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின்(பி.க.உ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.உ) விளக்கங்கள்

ஊழியர்களை இணைத்துக் கொள்வதற்கான கோரிக்கைகள் இதற்கு முன்னர் முன்வைக்கப்பட்ட போதிலும், இவ்வருடம் மார்ச் மாதம் வரையிலும் அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை எனவும், தற்போது ஏராளமான பதவிகளுக்கு விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், பரீட்சைகள்

திணைக்கத்துடன் தொடர்பு கொண்டு, மேற்படி பரீட்சைகளை ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புகையிரதத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

உரிய நேரத்தில் பதவிகளுக்கான ஆட்சேர்ப்புகளை செய்யாமை புகையிரத் திணைக்களத்தின் வினைத்திறனின்மைக்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளது என்பது குழுவின் கருத்தாக இருந்தது.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

1. ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகளை உரிய நேரத்தில் வழங்காமையின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்காக பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரைகள் வழங்கப்பட்டன.
2. அரச சேவை ஆணைக்குழு மூலம் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் ஒழுக்காற்று நடவடிக்கைகள் செயற்படுத்தப்படாமை தொடர்பாக அறிக்கையொன்றினை குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலருக்கு விதப்புரைகள் வழங்கப்பட்டன.

### உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடுதல்

- 2025.09.30 ஆகும் போது வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பான தகவல்கள், MT/04/14/03/01-2025 மற்றும் 2025.11.13 திகதிய கடிதம் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இணைப்பு இன் கீழ் குழு 19விடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- அரச சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள தீர்மானங்கள் செயற்படுத்தப்படாத ஒழுக்கக் கோவைகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 26) இணையத்தளத்தின் ஊடாக புகையிரத ஆசனங்களை முன்பதிவு செய்தல்

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05**

**அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)**

கொழும்பு புறக்கோட்டை - பதுளை புகையிரதத்திற்குப் பெருமளவிலான பயணிகள் கேள்வி நிலவுவதோடு, அதற்காக நாளொன்றுக்கு 04 புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகவும், இதற்காக ஒவ்வொரு நாளும் இணையத்தளம் மூலமான ஆசன முன்பதிவுகளை மேற்கொள்ளுதல், ஒரு மாதத்திற்கு முன்னதாக மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பிக்கப்படுவதோடு, 01 வினாடிக்குள் 58 சதவீதத்திற்கும் அதிகமான ஆசனங்களும், ஒரு மணித்தியாலத்திற்குள் அனைத்து ஆசனங்களும் முன்பதிவுசெய்து முடிக்கப்படுகின்ற போதிலும், அதிகரித்து வரும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்குரிய பிரேரணையொன்றைத் தயாரித்து அதிகாரிகளின் கவனத்திற்குக் முன்வைக்கப்படவில்லை எனவும், அவ்வாறே, இணையத்தளத்தின் ஊடாக ஆசனங்களை முன்பதிவு செய்யும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் மற்றும் விதிகளின் 01 ஆம் பிரிவின்படி, ஒரு அடையாள அட்டைக்கு 05 ஆசனங்களை மாத்திரமே முன்பதிவு செய்ய முடியும் என்ற போதிலும், மாதிரி கணக்காய்வுப் பரிசோதனையின் போது ஒரு அடையாள அட்டைக்கு 24 முதல் 182 ஆசனங்கள் வரை முன்பதிவு செய்யப்பட்டிருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. மேலும், 1041 இலக்க 'எல்ல ஒடிசி' புகையிரதத்தில் 2024 நவம்பர் மாதத்தில் மாதிரிப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 09 நாட்களில், கோட்டையிலிருந்து கண்டி வரை முதலாம் வகுப்பில் 1184 ஆசனங்களும், இரண்டாம் வகுப்பில் 1036 ஆசனங்களும், மூன்றாம் வகுப்பில் 285 ஆசனங்களுமாக மொத்தம் 2500 ஆசனங்கள் பயணத்தின்போது வெறுமையாகக் காணப்பட்டுள்ளமை கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதேபோன்று, M-ஆசன முன்பதிவு முறையை நடைமுறைப்படுத்துவதற்காக வரையறுக்கப்பட்ட மொபிரெல் (தனியார்) நிறுவனம் மற்றும் இலங்கை புகையிரதத் திணைக்களம் ஆகியவற்றுக்கு இடையே எட்டப்பட்டிருந்த ஒப்பந்தம் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்திருந்தது. எனினும், குறித்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவோ அல்லது புதிய ஒப்பந்தமொன்றை எட்டவோ நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலையில், M-ஆசன முன்பதிவிற்குரிய கட்டணங்கள் மொபிடெல் நிறுவனத்தின் கணக்கொன்றில் வைப்பிலிடப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டது.

### ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.உ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.உ) விளக்கங்கள்

சில நபர்களும் நிறுவனங்களும் திட்டமிட்ட முறையில் இப்பயணச்சீட்டுகளைக் கொள்வனவு செய்து மீண்டும் அதிக விலைக்கு விற்பனை செய்வதைக் கண்டறிந்த பின்னர், அது தொடர்பாகப் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

அத்துடன், அதிக தேவையுள்ள புகையிரதப் பாதைகளுக்காக மேலதிக புகையிரதப் பயணங்கள் ஏற்கனவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகப் புகையிரதத் திணைக்கள உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். பயணச்சீட்டுகளுக்கான மீளளிப்புக் கொள்கையை (Refund policy) மாற்ற நடவடிக்கை எடுத்தல், ஒரு அடையாள அட்டை இலக்கத்தின் மூலம் முன்பதிவு செய்யக்கூடிய ஆசனங்களின் எண்ணிக்கையை வரையறுத்தல், OTP முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் முன்பதிவு செய்யக்கூடிய ஆசனங்களை – மட்டுப்படுத்துதல் மற்றும் 'எல்ல ஒடிசி' புகையிரத ஆசனமொன்றின் விலையைத் தீர்மானிக்கும் போது பயணத்தின் பிரதான பயண இலக்கை அடைதல் மற்றும் மீளத் திரும்புதல் ஆகிய இரு பயணங்களையும் கருத்திற்கொண்டு விலை நிர்ணயம் செய்தல் போன்ற நடவடிக்கைகளினால் புகையிரதத் திணைக்களத்திற்கு நட்டம் ஏற்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

திணைக்களத்தினால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் காத்திரமானவை என்றும், இதன் மூலம் புகையிரதத் திணைக்களத்திற்கு நட்டம் எதுவும் ஏற்படவில்லை என்றும் குழு அவதானித்தது.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

இந்தக் கணக்காய்வு விடயம் தொடர்பாக குழுவினால் விதப்புரைகள் எவையும் முன்வைக்கப்படவில்லை.

### உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடுதல்

ஏற்புடையதன்று.

# 27) ஹச்சிசன் ரெலிகொமியுனிகேஷன் லங்கா தனியார் நிறுவனமும் புகையிரதத் திணைக்களமும் இணைந்து புகையிரதப் பாதையில் கூட்டுக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்.

- **விசாரணை செய்யப்பட்ட திகதி - 2025.06.05**

### அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)

ஹச்சிசன் ரெலிகொமியுனிகேஷன் லங்கா தனியார் நிறுவனத்தின் பிரேரணைக்கமைய, இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் கூட்டுக் கருத்திட்டமொன்றில் பங்காளராக இணைந்து, கொம்பனித்தெரு புகையிரத நிலையத்திலிருந்து பேரலந்த புகையிரத நிலையம் வரை (புத்தளம் பாதை 20 கிலோமீற்றர் வரை) மற்றும் மருதானை புகையிரத நிலையத்திலிருந்து பனாகொட புகையிரத நிலையம் வரை (களனிவெலி பாதை 30 கிலோமீற்றர் வரை) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் பாதையூடாக **Fiber Cables** பதிக்கும் திட்டத்தின் தொழில்நுட்ப, சுற்றாடல் மற்றும் நிதித் துறைகளை உள்ளடக்கிய முறையான சாத்தியக்கூற்று ஆய்வு நடத்தப்படாமை, முறையான சட்ட ரீதியான அனுமதிகளைப் பெற்று எழுத்துமூல ஒப்பந்தங்களை எட்டுவதற்கு முன்னரே பணிகள் ஆரம்பிக்கப்பட்டமை ஆகிய குறைபாடுகளைக் கணக்காய்வு சுட்டிக்காட்டியது. இக்கருத்திட்டத்தின் கீழ் வடங்களை இடுவதற்காக அகழ்வுப் பணிகளை முன்னெடுத்த போது, புகையிரதப் பாதையில் உள்ள கம்பிவடத்தொகுதிக்கு (கேபிள்) சேதம் ஏற்பட்டு அதன் மூலம் சமிக்ஞைத் தொகுதி பாதிக்கப்பட்டுள்ளமை, அந்தச் சேதத்திற்குரிய நட்டங்கள் இதுவரை மதிப்பிடப்பட்டு சம்பந்தப்பட்ட நிறுவனத்திடமிருந்து அறவிடப்படாமை மற்றும் இதுவரை கருத்திட்ட முன்னேற்றம் அறிக்கையிடப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்படுவதாக கணக்காய்வின மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.உ)/ கணக்கீட்டு அலுவலரின் (க.உ) விளக்கங்கள்

குறித்த கருத்திட்டங்கள் முன்னாள் செயலாளர்களின் அனுமதியுடன் முறையான நடைமுறைகளின்படி செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும், களனிவெலி பாதைத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதா இல்லையா என்பது குறித்து விரைவில் தீர்மானிக்க வேண்டும் என்றும் பிரதான கணக்கீட்டு அலுவலர் தெரிவித்தார்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

இக்கருத்திட்டத்தின் மூலம் புகையிரதத் திணைக்களத்திற்குப் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மைகள் பல காணப்படுவதை குழு அவதானித்தது.

### ஈ. குழுவின் விதப்புரைகள்

புத்தளம் பாதை கருத்திட்டத்தை மிக விரைவில் நிறைவு செய்யுமாறு பிரதம கணக்கீட்டு அலுவலர் மற்றும் கணக்கீட்டு அலுவலர் ஆகியோருக்குப் பரிந்துரைக்கப்பட்டது.

### உ. விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தைக் குழுவிற்கு அறிக்கையிடுதல்

- 50 கிலோமீற்றர் கொண்ட முழுக் கருத்திட்டத்தில், புத்தளம் பாதையின் பகுதியாக கொம்பனித்தெரு முதல் பேரலந்த வரை 20 கிலோமீற்றரும், மருதானை முதல் பனாகொட வரை களனிவேலி பாதை பகுதியாக 30 கிலோமீற்றருக்கும் கம்பிவடங்கள் இடப்பட வேண்டும் .அதில் புத்தளம் பாதை பகுதியில் பேரலந்த முதல் தெமட்டகொட வரையிலான பகுதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

- போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் MT/04/14/03/01-2025 மற்றும் 2025.10.07 ஆம் திகதியிட்ட கடிதத்தின் மூலம் (இணைப்பு 25-I), புத்தளம் பாதை பகுதியில் பேரலந்த முதல் தெமட்டகொட வரையிலான பகுதியை நிறைவு செய்ய அனுமதி கிடைத்துள்ளது. அதற்கமைய, அந்தப் பகுதியை நிறைவு செய்யுமாறு ஹட்சிசன் டெலிகொமியுனிகேஷன் லங்கா தனியார் நிறுவனத்திற்கு T.03/DPC/Misc/2025 மற்றும் 2025.10.27 ஆம் திகதியிட்ட கடிதத்தின் (இணைப்பு 25-II) மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிக்கை 2025.11.13 ஆம் திகதியிட்ட MT/04/14/03/01-2025 கடிதத்தின் மூலம் இணைப்பு 19 இன் கீழ் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 28) புகையிரதப் போக்குவரத்து மற்றும் புகையிரதத்தினுள் காணப்படும் வசதிகள்

❖ **விசாரணை செய்யப்பட்ட திகதி -2025.06.05**

### அ.கலந்துரையாடப்பட்ட விடயங்கள் (கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளுக்கமைய)

2025 ஜனவரி 25 ஆம் திகதி கால அட்டவணைப்படி மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிப் புறப்படவிருந்த புகையிரதம், இரண்டு புகையிரதப் பாதுகாவலர்களுக்குத் தங்குமிட வசதி போதுமானதாக இல்லாமையினால் இயக்கப்படவில்லை என்றும், அவர்களுக்கு ஒரு அறையிலேயே தங்குமிட வசதி வழங்கப்பட்டிருந்தது என்றும் குறித்த புகையிரதம் ஜனவரி 26 ஆம் திகதி கால அட்டவணையின்றியும் பயணிகள் எவருமின்றியும் கொழும்புக்கு பயணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. புகையிரதப் பயணம் இரத்துச் செய்யப்பட்டதால் ரூபா 600,000 வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன், குறித்த நாளில் உரிய கால அட்டவணைப்படி புகையிரதம் இயங்காததால் திணைக்களத்திற்கும் பயணிகளுக்கும் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மற்றும் இழப்புக்கள் குறித்து ஆராய்ந்து இது தொடர்பான நடவடிக்கைகளை திணைக்களம் மேற்கொள்வதற்கும், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காமை மற்றும் எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் தடுக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை குறித்தும் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டது.

### ஆ.பிரதான கணக்கீட்டு அலுவலரின் (பி.க.உ)/ கணக்கீட்டு அலுவலரின்(க.உ) விளக்கங்கள்

புதிய புகையிரதப் தொகுதிகளைக் கொள்வனவு செய்யும் போது கழிப்பறை வசதிகளைக் கொண்ட தொகுதிகளே கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போதுள்ள புகையிரதக் கழிவறைத் தொகுதிகளைக் கண்டி, நானுஓயா, மஹவ, அனுராதபுரம் ஆகிய நிலையங்களில் துப்புரவு செய்வதற்குத் தேவையான நிதி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாகவும் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

### இ. குழுவின் அவதானிப்புகள்

வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் அதிகளவிலான பயணிகளைப் புகையிரதப் போக்குவரத்து முறைமைக்குள் ஈர்க்க முடியும் என்றும், அதன் மூலம் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்றும் குழு கருத்துத் தெரிவித்தது.

**ஈ. குழுவின் விதப்புரைகள்**

1. உணவகங்கள், தங்குமிடங்கள் மற்றும் சுகாதார வசதிகளை முறையான வகையில் அபிவிருத்தி செய்யக்கூடியவாறு கேள்விப்பத்திர நடைமுறையைச் செயல்படுத்துமாறும், அந்த நடைமுறையைக் மேற்பார்வை செய்வதற்கானதொரு செயன்முறையைத் தயாரித்துச் சமர்ப்பிக்குமாறும் புகையிரதத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டது.
2. கழிப்பறை கழிவுகள் புகையிரதப் பாதையில் விழாதவாறு சேகரித்து அகற்றுவதற்கான ஒரு முறையை மிக விரைவில் தயாரிக்குமாறு புகையிரதத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டது.
3. புகையிரதத் திணைக்களத்திடம் உள்ள மொத்த எஞ்சின்களின் எண்ணிக்கை, அவற்றின் தற்போதைய நிலைமை மற்றும் அவற்றை மீண்டும் பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் உள்ளிட்ட தகவல்களைக் கொண்ட அறிக்கையொன்றைக் குழுவிடம் சமர்ப்பிக்குமாறு புகையிரதத் திணைக்களத்தின் கணக்கீட்டு அலுவலருக்கு பரிந்துரைக்கப்பட்டது.

**உ.விதப்புரைகளை நிறைவேற்றுவதிலான முன்னேற்றத்தை குழுவிற்கு அறிக்கையிடுதல்**

உணவகங்கள், தங்குமிட வசதிகள் மற்றும் சுகாதார வசதிகள் தொடர்பான அறிக்கை 2025.11.13 ஆம் திகதியிட்ட MT/04/14/03/01-2025 கடிதத்தின் மூலம் இணைப்பு 19 இன் கீழ் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.